2021 Thinakaran and Vaaramanjari paper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com - E Paper

மின்னிதழ்

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஒக்டோபர் 8 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

90 ANNIVERSARY 1932 - 2022

வரு. 90 இல. 238 | Saturday 08, October, 2022 | 13 பக்கங்கள் | 40/-

## வீடொன்றிலிருந்து ஆறு கிலோ ஹெரோயின் மீட்பு

### கெஸ்பேவ பொலிஸார் அதிரடி

கெஸ்பேவ பகுதியில் 06 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கெஸ்பேவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்தே ஹெரோயின் தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

06

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண

## தனிப்பட்ட அரசியலை விடுத்து அனைவரும் ஒன்றுபட அழைப்பு

### பாராளுமன்றத்தில் அமைச்சர் பந்துல குணவர்தன அறைகூவல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் தனிப்பட்ட அரசியலை விடுத்து அனைவரும் இணைந்து கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்றை மேற்கொள்வது அவசியம் என அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடி நிலைக்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லாமல் தீர்வு காண முடியாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டின் நிலை, உலக ரீதியிலான நிலைமைகளை கவனத்திற் கொண்டு தனிப்பட்ட அரசியலை விடுத்து கொள்கை ரீதியான தீர்மானமொன்றை அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அரசியல் ரீதியாக எத்தகைய கருத்துக்கள் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற

06

## சர்வதேச ரீதியில் இலங்கை தனிமைப்படுத்தப்படவில்லை

### சிறப்பான நட்புறவுகளுடன் உதவிகளும் கிடைக்கின்றன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச ரீதியில் இலங்கை தனிமைப்படுத்தப்படவில்லை என்றும் நாடுகளுக்கு இடையில் நட்புறவுகள் சிறப்பாக பேணப்படும் நிலையில் சர்வதேச உதவிகள் தொடர்ந்து தடையின்றி கிடைத்து வருவதாகவும்

06

சவால்களிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது அவசியம்

## தகவல்களை மிகத் துல்லியமாக மக்கள் முன் கொண்டு செல்லவும்

### ஊடகச் செயலாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் எடுத்துரைப்பு

தற்போதைய சவாலிலிருந்து நாட்டை மீட்டெடுக்க நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டுமெனவும், அதற்கு துல்லியமான தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது அவசியமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரசாரமின்றி எதனையும் சாதிக்க முடியாதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை தாமதமின்றி மக்களுக்கு கொண்டு சேர்க்க அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும், அனைத்து ஊடக செயலாளர்களிடமும் கோரிக்கை விடுத்தார்.

அரச தொடர்பாடல் பொறிமுறை தொடர்பில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் ஆகியோரின் ஊடக செயலாளர்களை தெளிவுபடுத்தும் செயலமர்வு நேற்று (07) அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

06

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம்;

# இலங்கை திட்டவட்டமாக நிராகரிப்பதாக அறிவிப்பு

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அறிக்கை மூலம் தெரிவிப்பு




ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பு மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட, 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல்' என்ற தலைப்பிலான தீர்மானத்தை இலங்கை திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மன், மலாவி, மொன்டனீக்ரோ, வடக்கு மசிடோனியா மற்றும் ஐக்கிய நாடுகளால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி தீர்மானம் நேற்று முன்தினம் (06) வாக்கெடுப்பு மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தையே இலங்கை திட்டவட்டமாக நிராகரித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட நாடு என்ற வகையில் இலங்கை சார்பாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி அறிக்கையை வெளியிட்டதுடன், எதிராக வாக்களிப்பதன் மூலம் இந்தத் தீர்மானத்தை நிராகரிக்குமாறு சபை உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

### தீர்மானத்தை நிராகரிப்பதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்தி அறிக்கையை வெளியிட்டார்

தீர்மானத்தை எதிர்க்கும் இலங்கையின் நிலைப்பாட்டை ஆதரித்து, பாகிஸ்தான் பிரதிநிதிகள் வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுத்தனர். 07 நாடுகள் (பொலிவியா, சீனா, கியூபா, எரித்திரியா, பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் வெனிசுலா) தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்ததோடு, 20 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. தீர்மானத்துக்கு ஆதரவாக 20 நாடுகள் வாக்களித்தன.

06



அரச தொடர்பாடல் பொறிமுறை தொடர்பில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் ஆகியோரின் ஊடக செயலாளர்களை தெளிவுபடுத்தும் செயலமர்வு நேற்று (07) அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டாரவும் கலந்து கொண்டார்.



அந்நியச் செலாவணி பற்றாக்குறையால்

## சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டது

### எரிபொருளுக்கு தட்டுப்பாடு வராதாம்

04

குருந்தூர்மலை பிரச்சினை உட்பட

## தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகாண ஜனாதிபதியுடன் பேச்சு

### கஜேந்திரகுமாருக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**




குருந்தூர் மலை பிரச்சினை உட்பட தமிழ் மக்களின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06

## திக்கம் வடிசாலையை தனியார் நிறுவனத்திற்கு வழங்க முயற்சி

### தடுத்து நிறுத்துமாறு அங்கஜன் M.P அமைச்சர் ரமேஷுக்கு கடிதம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**




வடமராட்சி திக்கம் வடிசாலையை தனியார் நிறுவனத்திற்கு தாரை வார்க்கும் முயற்சியை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்கக் கோரி யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் பெருந்தோட்ட மற்றும்

06

## தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ.2000 அடிப்படை சம்பளம்

### சிவில் அமைப்புகளின் கூட்டணி வலியுறுத்து

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக 2,000 ரூபாய் வழங்கப்பட வேண்டுமென்ற யோசனையை தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் கூட்டணி முன்வைத்துள்ளது.

மலையக சிவில் மற்றும் தொழிற்சங்க, வெகுசன அமைப்புகள் இணைந்து ஹற்றனில் நேற்று நடத்திய கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

அத்துடன், மலையக மக்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என கோரிக்கையும் இதன் போது வலியுறுத்தப்பட்டது.

இதில் மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கத்தின்

06

பணவீக்க நிலைமையை கட்டுப்படுத்த

## கையிருப்பிலுள்ள பணம் தாராளமாக போதுமானது

### மத்திய வங்கி ஆளுநர் தகவல்



பணவீக்க நிலைமையை கட்டுப்படுத்த கையிருப்பிலுள்ள பண நிலைமை போதுமானது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,..

06

2022 ஜனவரி முதல் 2,24,915 பேர் விண்ணப்பம்;

## திடீரென அதிகரித்த பாஸ்போட் விநியோகம்

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தகவல்

கடவுச்சீட்டு பெறுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

2022 ஜனவரி முதல் ஜூலை வரையில் மட்டும் 2,24,915 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக பதிவு செய்துள்ளதாக பணியகம் வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

இது கடந்த சில ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் எண்ணிக்கை.

செப்டெம்பர் 30 அன்று இந்த எண்ணிக்கை மேலும் 2,33,756 ஆக அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு

06

## அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்தது சதொச

### ஆறு நுகர்வு பொருட்களின் விலை நேற்று முதல் குறைப்பு

லங்கா சதொச ஆறு அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலையை நேற்று முதல் அமுலாகும் வகையில் குறைத்துள்ளது.

இதற்கமைய ஒரு கிலோகிராம் உள்ளூர் உருளைக்கிழங்கின் விலை 35 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, 430 ரூபாயாக இருந்த ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கு தற்போது 395 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோ கொண்டைக்கடலையின் விலை, 35 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

06

உரப்பை ஒன்றினுள் சுற்றிய நிலையில்

## முட்புதருக்குள் வீசப்பட்ட குழந்தை உயிருடன் மீட்பு

### திவுல்வெவ பொலிஸார் தீவிர விசாரணை

திவுல்வெவ பிரதேசத்தில் குழந்தை ஒன்று உரபையில் சுற்றி முட்புதரில் வீசப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மதியம், வீட்டில் இருந்து தனியாக வெளியே சென்ற குழந்தை கை, கால்கள் கட்டப்பட்டு உரப் பையில் சுற்றப்பட்டிருந்த நிலையில் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

அந்தக் குழந்தையின் வயது 04. அதிர்ச்சிக்குள்ளாகியுள்ள குழந்தை ஆனமடுவ மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக

06

தங்கச்சங்கிலி உட்பட ரொக்கப்பணம்

## ஓடும் ரயிலில் துணிகரமாக இடம்பெற்ற கொள்ளை

### மன்னார் தம்பதி தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில்

ஓடும் ரயிலில் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி, இரண்டு இலட்சம் ரூபா பணம் அடங்கிய பண பையை கொள்ளையிட்ட சம்பவம் அங்குலான பகுதியில் நேற்று முன்தினம் (06) அதிகாலை கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கி பயணித்த ரயிலில்

06



## ஜனாதிபதியின் உரையில் முக்கிய விடயங்கள் தவறவிடப்பட்டுள்ளன

### சபையில் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டு

03





## புனர்வாழ்வு சட்டத்தை அரசு மீளாய்வு செய்ய வேண்டும்

### சபையில் ரவூப் ஹக்கீம் M.P கோரிக்கை

03

## தனுஷ்கோடி மணல்திட்டில் இரு நாட்களாக தவித்த அகதிகள்

### 03 குழந்தைகள் உட்பட ஐவர் மீட்பு

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



தனுஷ்கோடி அருகில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 குழந்தைகள் உட்பட 5 பேர் தவித்துக் கொண்டிருந்தவர்களை மண்டபம் கடலோர காவல் படை பொலிசாரால் மீட்கப்பட்டு விசாரணைக்கு பின்னர் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

06


2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# சர்வதேச செய்திகள்

## பனிப்போரின் பின் முதல்முறை அணுவாயுத அச்சுறுத்தல் உச்சம்

### அமெரிக்க ஜனாதிபதி எச்சரிக்கை





பனிப்போருக்குப் பின்னர் முதல் முறையாக அணுவாயுத அழிவு ஏற்படக்கூடிய ஆபத்து உருவெடுத்திருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார்.

உக்ரைன் மீது அணுவாயுதங்களைப் பயன்படுத்துவது குறித்து மிரட்டல்களை விடுக்கும்போது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அதை வேடிக்கையாகக் கூறவில்லை என்றும், உண்மையில் அவ்வாறே செய்யக்கூடும் என்றும் பைடன் எச்சரித்தார்.

இதற்கிடையே ரஷ்யா அணுவாயுதத் தாக்குதல்களை நடத்தினால், அவை போர்த்தந்திர ரீதியாக இருக்கக்கூடும் என்றும், சிறிய அளவில் மட்டுமே இருக்கக்கூடும் என்றும் நிபுணர்கள் கருதுகின்றனர்.

இருப்பினும், அத்தகைய தாக்குதல்கள் மேலும் பரவலான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என்று பைடன் எச்சரித்துள்ளார்.

புட்டின் எப்போது போரை நிறுத்துவார் என்பதைக் கண்டறிய முயல்வதாகவும் அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவின் அணு ஆயுத எச்சரிக்கையை தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் முன்னதாக கூறியிருந்தது.

எனினும் ரஷ்யாவின் அணு ஆயுதம் பற்றி பேசியபோதும், அது அணு ஆயுதத்தை பயன்படுத்துவதற்கான தயார்படுத்தல்களை காணவில்லை என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜக் சுல்லிவன் கடந்த வாரம் கூறியிருந்தார்.

ரஷ்யா ஆக்கிரமித்த பகுதிகளை உக்ரைன் தற்போது துரிதமாக மீட்டு வருகிறது. இதில் ரஷ்யா தனது ஆட்புலத்திற்குள் இணைத்துக் கொண்ட நான்கு பிராந்தியங்களைச் சேர்ந்த பகுதிகளும் அடங்கும்.

“அவர்கள் செல்லும் பாதை தொடர்ந்தால், அணு ஆயுதத்தை பயன்படுத்துவதற்கான நேரடி அச்சுறுத்தல் ஒன்றுக்கு நாம் முகம் கொடுப்போம். கியூபா ஏவுகணை சர்ச்சைக்குப் பின் முதல் முறை இவ்வாறான அச்சுறுத்தல் ஒன்றை எதிர்கொண்டுள்ளோம்” என்று சக ஜனநாயகக் கட்சியினருடன் கடந்த வியாழக்கிழமை (06) உரையாற்றும்போது பைடன் தெரிவித்தார்.

1962இல் ஜனாதிபதி ஜோன் எப் கென்னடி மற்றும் நிஜிடா க்ருஷேவின் கீழ் அமெரிக்கா மற்றும் சோவியட் ஒன்றியம் அணு ஆயுதப் போர் ஒன்றை நெருங்கி வந்தது. ரஷ்ய அணு ஆயுதங்கள் கியூபாவில் நிறுத்தப்படுவது பற்றிய பதற்ற சூழலாலேயே இந்த நிலை ஏற்பட்டது.

இந்த சம்பவமே உலகம் முழு அளவான அணு ஆயுதப் போர் ஒன்றை நெருங்கிய சூழலாக கருதப்படுகிறது.

## உலக அந்நியச் செலாவணி கையிருப்பில் பாரிய வீழ்ச்சி

### ஒரு டிரில்லியன் டொலர் கரைந்தது



உலக அந்நியச் செலாவணி இருப்பு சாதனை அளவாக வேகமாகக் கரைந்து வருகிறது.

இந்தியா முதல் செக் குடியரசு வரைப்பட்ட பல நாடுகளின் மத்திய வங்கிகளும் தங்களுடைய நாணயங்களைப் பலப்படுத்த தலையிடுகின்றன. இதுவே இருப்பு குறைவதற்கான முக்கிய காரணமாக உள்ளது.

உலக அந்நியச் செலாவணி கையிருப்பு இந்த ஆண்டில் ஏறக்குறைய ஒரு டிரில்லியன் அமெரிக்க டொலர் அல்லது 7.8 வீதம் குறைந்துள்ளது.

அமெரிக்காவின் புளும்பெர்க் நிறுவனம் 2003ஆம் ஆண்டு முதல் உலக அந்நியச் செலாவணி இருப்பு பற்றிய தகவல்களைத் திரட்டி வருகிறது. அப்போது முதல் இதுவரை இந்த அளவுக்கு இருப்பு குறைந்ததில்லை. பல நாணயங்களின் மதிப்பில் ஏற்பட்ட மாற்றங்களும் இந்தக் குறைவுக்கு காரணம்.

அமெரிக்க டொலரின் மதிப்பு பல நாட்டு நாணயங்களுக்கு எதிராக 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கூடியுள்ளது.

அந்நியச் செலாவணி இருப்பு குறைவது, நாணயச் சந்தையில் நிலவும் இறுக்கமான சூழலைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

அமெரிக்க டாலருக்கு எதிராக தங்கள் நாணயங்களின் மதிப்பு குறைவதால் அந்தக் குறைவைத் தடுக்க பல நாடுகளின் மத்திய வங்கிகளும் தலையிடுகின்றன.

இந்தியாவின் கையிருப்பு இந்த ஆண்டு 96 பில்லியன் அமெரிக்க டொலர் குறைந்து 538 பில்லியன் டொலராக உள்ளது. ஜப்பான் தனது யென் நாணய மதிப்பு குறைவதை மெதுப்படுத்த செப்டெம்பர் மாதம் சுமார் 20 பில்லியன் டொலர்களை செலவிட்டது.

செக் குடியரசு அரசாங்கம் தன் நாணய மதிப்பு குறைவதைத் தடுக்க எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக அந்த நாட்டின் கையிருப்பு கடந்த பெப்ரவரி முதல் 19 வீதம் குறைந்துள்ளது.


பல நாடுகளின் மத்திய வங்கிகளும் இன்னமும் வலுவாகவே இருப்பதால் அவை தங்கள் நாணயங்களை வலுப்படுத்த தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கும் நிலையில் உள்ளன.

இந்த நிலையில், மலேசியா, இந்தோனேசியா, சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகள் தங்கள் அந்நிய கையிருப்பு பற்றிய தகவல்களை நேற்று வெளியிட திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் போன்ற இதர பல நாடுகளின் இருப்புகள் வேகமாகக் குறைந்து வருவதாகவும் புளும்பெர்க் தெரிவித்துள்ளது.

## சிறை அனுபவிக்கும் வழக்கறிஞருக்கு அமைதிக்கான நோபல் விருது அறிவிப்பு

### உக்ரைன், ரஷ்ய உரிமை அமைப்புகளுக்கும் விருது



சிறைவைக்கப்பட்டுள்ள பெலாரஸைச் சேர்ந்த மனித உரிமை செயற்பாட்டாளர் அலெஸ் பியலியட்கி, ரஷ்யாவின் மனித உரிமைகள் அமைப்பு நினைவகம் மற்றும் சிவில் உரிமைகளுக்கான உக்ரைனிய மனித உரிமைகள் அமைப்புக்கு இந்த ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

போர் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றை ஆவணபடுத்த மேற்கொண்ட முயற்சிகளுக்காக அலெஸ் பியலியட்கி மற்றும் உக்ரைன், ரஷிய மனித உரிமை அமைப்புகளுக்கு அமைதிக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ரஷ்ய மனித உரிமைகள் அமைப்பு நினைவகம், ரஷ்யா உக்ரைன் மேல் போர் ஆரம்பித்ததில் இருந்து நடக்கும் போர்க் குற்றங்களைப் பற்றித் தொடர்ந்து உலக அரங்கில் வெளிப்படுத்தி வருகிறது.

சிவில் உரிமைகளுக்கான உக்ரைனிய மனித உரிமைகள் அமைப்பு, மனித உரிமைகளைக் காக்கவும், அதனை வலுப்படுத்தவும் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் உக்ரைனில் ஜனநாயகத்தை மேம்படுத்தி வலுப்படுத்த பெரும் பங்கு அளித்துள்ளது. அதற்காக அந்த அமைப்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து பெலாரஸைச் சேர்ந்த மனித உரிமை வழக்கறிஞர் அலெஸ் பியலியட்கி, 1980களில் பெலாரஸில் நடந்த ஜனநாயக இயக்கத்தை முன்மொழிந்தவர்.

2020 ஆம் ஆண்டு தேர்தல் மோசடி தொடர்பில் இடம்பெற்ற பாரிய ஆர்ப்பாட்டத்தின்போதே பியலியட்கி கைது செய்யப்பட்டார். அவரது நிலை குறித்து அரசு தொடர்ந்து அமைதிகாத்து வருவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

சுமார் 900,000 அமெரிக்க டொலர் பெறுமதியான நோபல் விருதுகள் வரும் டிசம்பர் 10 ஆம் திகதி ஒஸ்லோவில் இடம்பெறும் வைபவத்தில் வழங்கப்படவுள்ளது. இந்த வாரம் முழுவதும் நோபல் விருதுகள் அறிவிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, 2022 ஆம் ஆண்டுக்கான பௌதீகவியல், இரசாயனவியல், மருத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அமைதிக்கான நோபல் பரிசு நோர்வேயிலும் மற்ற பிரிவுக்கான நோபல் பரிசு ஸ்டொக்ஹோமிலும் அறிவிக்கப்படுகின்றன.

## உலகின் வயதான நாய் 22 வயதில் உயிரிழப்பு



கின்னஸ் உலக சாதனையில் இடம்பெற்றிருந்த உலகின் மிக வயதான நாய் இந்த வார ஆரம்பத்தில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெபல்ஸ் என்ற அந்த டோய் பொக்ஸ் டெரியர் வகை நாய், 22 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தது. அது 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி பிறந்தது.

பெபல்ஸ் அதன் வாழ்க்கையின் பெரும்பகுதியை அமெரிக்காவின் சௌத் கரோலைனாவில் வசித்தது. அது 32 குட்டிகளையும் பெற்றெடுத்தது.

அதன் இறப்பை அறிவித்த கின்னஸ் உலக சாதனைகள் குழு, பெபல்ஸ் உயிருடன் இருந்தபோது அதுவே உலகின் மிக வயதான நாய் என்பதை உறுதிசெய்தது.

பெபல்ஸ் இயற்கையான காரணங்களால் உயிரிழந்தது என்றும், அது உயிரிழக்கும்போது அதைச் சுற்றிக் குடும்பத்தார் இருந்தனர் என்றும் அதன் உரிமையாளரான ஜூலி கிரகோரி அவரது இன்ஸ்டாகிராம் பதிவில் குறிப்பிட்டார்.

2012ஆம் ஆண்டில் அது பூனைகளுக்கான உணவைச் சாப்பிட வேண்டும் என்று விலங்குநல மருத்துவர் குறிப்பிட்டிருந்தார். பூனைகளின் உணவில் கூடுதல் புரதச் சத்து உள்ளது. அன்றிலிருந்து பெபல்ஸ் அவ்வாறே பூனைகளுக்கான உணவைத் தின்று வளர்ந்தது.

பெபல்ஸ் அதன் 23ஆவது பிறந்த நாளுக்கு 5 மாதங்களுக்கு முன்னர் இறந்தது.

## கால்பந்து அரங்கில் நெரிசல்: 6 பேருக்கு குற்றச்சாட்டு பதிவு



இந்தோனேசியாவில் கடந்த வாரம் விளையாட்டரங்கில் நடந்த கலவரம் மற்றும் கூட்ட நெரிசல் தொடர்பில் 6 பேர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவர்களில் மூவர் பொலிஸ் அதிகாரிகள் என்றும் 3 பேர் முக்கியக் கால்பந்து அதிகாரிகள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கவனக்குறைவால் மரணத்தை விளைவித்த குற்றம் நிரூபிக்கப்பட்டால், அதிகபட்சமாக அவர்களுக்கு ஐந்தாண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

விளையாட்டரங்கத்தில் கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்த உத்தரவிட்டதற்காக 2 பொலிஸ் அதிகாரிகள் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. அதைத்தடுத்து நிறுத்தத் தவறிய இன்னொரு அதிகாரியும் விசாரிக்கப்படுகிறார்.

கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்த கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்படக் கூடாது என்று சர்வதேச கால்பந்து சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தோனேசிய விளையாட்டரங்கில் நடந்த கைகலப்பைக் கலைப்பதற்குக் கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டது. அதில் ஏற்பட்ட கலவரத்தில் பலர் மிதிபட்டும் மூச்சுத் திணறியும் 131 பேர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்தைத் தொடந்து நாட்டின் கால்பந்து லீக் போட்டிகள் அனைத்தையும் விசாரணை முடியும் வரை இந்தோனேசிய அரசு இடைநிறுத்தியது.

## கைதியுடன் பொலிஸ் காரில் மோதிய ரயில்




அமெரிக்காவின் கோலராடோ மாநிலத்தில் ரயில் வண்டி ஒன்று பொலிஸ் காரை மோதியபோது, பின் இருக்கையில் அமர்ந்திருந்த பெண் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார். சம்பவம் இரு நாட்களுக்கு முன் நடந்தது.

அந்த பெண், 20 வயது யாரெனி ரியோஸ் கொன்ஸாலெஸ் என பி.பி.சி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

வீதியில் முறையற்ற வகையில் வாகனத்தை ஓட்டிய சந்தேகத்தின் பேரில் அவர் பிடிபட்டார்.

அவரைக் கைது செய்து பொலிஸ் காரில் பின் இருக்கையில் தடுத்து வைத்த அதிகாரிகள், துப்பாக்கி ஏதும் உள்ளதா என்பதைச் சோதிக்க அவரது காருக்குச் சென்றனர்.

சிறிது நேரத்திற்குப் பின்னர் அந்தப் பெண், வாகனத்தை விட்டு வெளியேற முயற்சி செய்ததாக பி.பி.சி. செய்தி கூறியது. ஆனால், கதவு பூட்டப்பட்டிருந்ததால், அவரால் வெளியேற முடியவில்லை.

அவர் பொலிஸ் அதிகாரியின் கவனத்தைத் தனது பக்கம் திருப்பக் கதறி அழுதார். ஆனால் பொலிஸ் அதிகாரிகள் அவரது குமுறலைக் கேட்கவில்லை.

அதற்குள் அங்கு வந்த ரயில், காரின் மீது மோதியது. அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய பெண்ணுக்குக் காயங்கள் ஏற்பட்டன. பொலிஸ் அதிகாரிகள் விசாரணையில் உதவி வருகின்றனர்.

அந்தப் பெண்ணின் மீதும் அதிகாரிகள் மீதும் இன்னமும் குற்றஞ்சாட்டப்படவில்லை.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஒக்டோபர் 8 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

**தொழுகை நேரம்**

07 முதல் 08 வரை
சுபஹ் - 04.42
லுஹர் - 11.59
அஸர் - 03.16
மஃரிப் - 05.58
இஷா - 07.08

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

மேஷம் - செலவு
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

# கடந்த கால சம்பவங்களை மறந்து எதிர்காலத்திற்காக ஒன்றிணைவோம்

## சபையில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கடந்த கால சம்பவங்களை ஒரு புறம் வைத்துவிட்டு நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரும் நெருக்கடிகளுக்கு தீர்வு காண செயற்படுவதே அனைவரதும் பொறுப்பாகும்.

கடந்த கால அனைத்து தவறுகளுக்கும் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டியது அவசியம். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண பொது வேலை திட்டத்தில் அனைவரும் இணைந்து செயல்படுவது முக்கியம். நாடு இயல்பு நிலையை அடைந்ததும் ஒவ்வொருவரும் தமக்கான அரசியலை மேற்கொள்ள முடியும் என அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

விமர்சனங்களை முன்வைப்பவர்கள் அதனை விடுத்து மாற்று வழிகளை முன் வைக்க வேண்டும். கடந்த காலங்களில் அவ்வாறு செயல்படாமையே நாடு நெருக்கடி நிலையை எதிர்கொள்வதற்கு காரணமாகும்.

பாராளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்ற நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பாக ஜனாதிபதியின் உரை தொடர்பில் ஆளும் கட்சியினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடி காரணமாக நாங்கள் சற்று பின்னோக்கி இருக்கின்றபோதும் நாடு பெற்றுக் கொண்டுள்ள வெற்றிகளை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். குறிப்பாக சுகாதாரத் துறையில் போலியோ, மலேரியா, எச்ஐவி, ரூபெல்லா போன்ற நோய்கள் நாட்டில் இருந்தே இல்லாதொழிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று தாய் சேய் மரணங்கள் வெகுவாக குறைந்துள்ளன.

நாட்டின் எதிர்காலம் தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டிய காலம் இது. அதற்கான தீர்க்கமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம். சிறந்த திட்டங்கள் இருந்தால் அதனை அரசாங்கத்திடம் முன்வைக்க முடியும் என்றார்.

### நாட்டிலுள்ள 09 பிரதான வங்கிகளின்

# வலிமைத்தன்மை குறித்து பரிசீலிக்கவுள்ள மத்திய வங்கி



இலங்கை வங்கி, மக்கள் வங்கி உள்ளிட்ட பிரதான 09 வங்கிகளின் வலிமைத்தன்மையை பரிசீலிக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

அரச மற்றும் தனியார் வங்கிகளின் பிரதானிகளுடன் கடந்த நான்காம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த விடயம் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

தற்போது வங்கி கடன்களுக்காக விதிக்கப்படுகின்ற அதிக வட்டிவீதங்களுக்கு அமைய கடன்களில் ஏற்பட்டுள்ள பிரதிகூலங்கள் மற்றும் அனுகூலங்கள் தொடர்பில் இந்த பரிசீலனை இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக வங்கிகளில் மேற்கொள்ளப்படும் வெளிப்புற கணக்காய்வினை போன்று அல்லாது மாறுப்பட்ட முறையில் இந்த கணக்காய்வு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்திற்காக பல நிதித்துறை சீர்திருத்தங்கள், வலுவான மற்றும் போதுமான மூலதனமயமாக்கப்பட்ட வங்கி அமைப்பை நிறுவுதல் மற்றும் திருத்தப்பட்ட வங்கிச் சட்டம் உட்பட பல நிபந்தனைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

இதற்கமையவே இந்த பரிசீலனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதேவேளை, அரச மற்றும் தனியார் வங்கிகளிடமிருந்து அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ள கடனின் மொத்த பெறுமதி 13 ட்ரில்லியன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### கொக்குவில் பகுதியில்

# முச்சக்கர வண்டி சாரதிக்கு வாள்வெட்டு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் முச்சக்கர வண்டி சாரதி மீது வன்முறை கும்பல் ஒன்று வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

அச்சுவேலி பகுதியை சேர்ந்த செ. ரதீஸ்குமார் (வயது 41) என்பவரே தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந் நபர் வியாழக்கிழமை இரவு கொக்குவிலில் பகுதியில் இருந்து அச்சுவேலியில் உள்ள தனது வீடு நோக்கி முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த 06 பேர் கொண்ட வன்முறை கும்பல் ஒன்று அவரை வழிமறித்து வாளினால் வெட்டி விட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### உடபுஸ்ஸலாவை நகருக்கு

# நான்கு மாதங்களாக மண்ணெண்ணெய் வரவில்லை

**ஆ.ரமேஸ்**



உடப்புஸ்ஸலாவை நகரில் நான்கு மாதங்களாக மண்ணெண்ணெய் இன்மையால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இங்குள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக மண்ணெண்ணெய் கொண்டு வரப்படவில்லையென எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் ஜெயசேன அதிகாரம் தெரிவித்துள்ளார்

இதனால் 3000 க்கும் மேற்பட்ட பிரதேச மக்கள் பாரிய சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர்,

உடப்புஸ்ஸலாவை நகரில் ஒரே ஒரு எரிபொருள் நிரப்பு நிலையமாக சிபெட்கோ நிரப்பு நிலையம் மட்டுமே இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் மண்ணெண்ணையை பயன்படுத்தும் கிராமத்தவர்கள் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக பாரிய சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அத்துடன் இராகலை, ஊவா பரணகம, அம்பகாஸ்தோவ ஆகிய நகரங்களில் இயங்கும் சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாத்திரமே மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுகிறது.

### நாட்டை கடனிலிருந்து விடுவிப்பதற்கு

# அரசின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனிக்கும் IMF

இலங்கையை கடனிலிருந்து விடுவிப்பதற்குரிய மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு முன்னர், தம்முடைய அனைத்து கொள்கைகளுக்கும் பொருந்தக் கூடிய ஏற்பாடுகளை, இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் வரையில், தாம், காத்திருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான சிரேஷ்ட செயற்பாட்டு அதிகாரி மசாஹிரோ நொசாக்கி தெரிவித்துள்ளார்.

முன்னதாக கடந்த செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி 2.9 பில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்குவதற்கான பணியாளர் மட்ட உடன்பாட்டை சர்வதேச நாணய நிதியம் பூர்த்தி செய்தது.

இந்த உடன்பாடு, 48 மாதங்களுக்கான செலுத்துகையை கொண்டுள்ளது.இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக்குழுவிற்கு பொருந்தக் கூடிய கொள்கைகளை இலங்கை பூர்த்தி செய்யுமானால், அடுத்த கட்ட நடவடிக்கையை சர்வதேச நாணய நிதியம் மேற்கொள்ளும்.

குறிப்பாக ஏற்கனவே தமது நாட்டுக்கு கடன் கொடுத்தவர்களுடன் மறுசீரமைப்பு ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்ய வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கின்றது.

இந்த நிபந்தனை நிறைவேற்றப்படுமானால், சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கையின்படி, தற்போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள பணியாளர் உடன்பாடு நிர்வாகக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு, நிர்வாகக் குழு இலங்கைக்கு நிதியுதவிகளை செய்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட செயற்பாட்டு அதிகாரி மசாஹிரோ நொசாக்கி தெரிவித்துள்ளார்.

### அந்நியச் செலாவணி பற்றாக்குறையால்

# சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டது

## எரிபொருளுக்கு தட்டுப்பாடு வராதாம்



அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மீண்டும் மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரண்டு கப்பல்களிலிருந்து தரையிறக்கப்பட்ட மசகு எண்ணெயை பயன்படுத்தி இதுவரை சப்புகஸ்கந்த மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை செயற்படுத்தி வந்துள்ளோம்.

எனினும், மூன்றாவது கப்பல் இலங்கைக்கு வந்துள்ள போதும், அதற்கு செலுத்துவதற்கு அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக சுத்திகரிப்பு நிலையத்தை மூடுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பலுக்கான அந்நிய செலாவணியை மத்திய வங்கி ஒதுக்கியதும், குறித்த கப்பலில் எண்ணெய் இறக்கப்பட்டு, சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் செயற்படும்.என்ற போதும் இதன் காரணமாக நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதியின் உரையில் முக்கிய விடயங்கள் தவறவிடப்பட்டுள்ளன

## சபையில் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டைக் கட்டியெழுப்ப தேவையான முக்கியமான விடயங்கள் சிலவற்றை ஜனாதிபதி தனது உரையில் முன் வைக்கத் தவறிவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதனைக் கவனத்திற் கொண்டு 20 முக்கிய விடயங்களை சபையில் சமர்ப்பிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியில் உள்ள நாட்டைக் கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கின்ற போதும் கடன் மறு சீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகளை வெளிப்படுத்தாமல் இருப்பது முறையற்றது என்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் விசேட உரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள கடன் பெற்ற நாடுகளுடன் மேற்கொண்டிருக்கும் இணக்கப்பாடுகள், நிதி உதவிகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளின்

06

# புனர்வாழ்வு சட்டத்தை அரசு மீளாய்வு செய்ய வேண்டும்

## சபையில் ரவூப் ஹக்கீம் M.P கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



புனர்வாழ்வு சட்ட மூலத்தை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமை பேரவையில் நாட்டுக்கு ஏற்பட்ட தோல்வி அவமானத்துக்குரியதாகும் என சபையில் தெரிவித்த அவர், கடந்த காலங்களில் எமக்கு ஆதரவாக இருந்த நாடுகளும்

06

### பதில் பிரதம நீதியரசராக

# உயர்நீதிமன்ற நீதிபதி, ஜனாதிபதி சட்டத்தரணிபீ.பி. அலுவிஹாரே நியமனம்

## பாராளுமன்றப் பேரவையில் இணக்கம்

பிரதம நீதியரசர், ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய வெளிநாடு செல்லும் இன்றைய தினம் (08) முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பதில் பிரதம நீதியரசராக பணியாற்றுவதற்கு உயர்நீதிமன்ற நீதிபதி, ஜனாதிபதி சட்டத்தரணி பீ.பி. அலுவிஹாரேவை நியமிப்பதற்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்குப் பாராளுமன்றப் பேரவையில் (06) இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அதேபோன்று, காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்

06

# கொதிநீர் பீப்பாயில் வீழ்ந்த சிறைக்கைதி பரிதாபகரமாக உயிரிழப்பு

கொதிநீர் பீப்பாய் ஒன்றில் வீழ்ந்த கைதி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று மாலை அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் நடைபெற்றதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொதிநீர் பீப்பாயில் விழுந்தமையினால் பாரிய காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் அங்குனுகொலபெலஸ்ஸ பொலிஸார் மற்றும் சிறைச்சாலை திணைக்களம் உத்தியோகத்தர்கள் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமக்கும் சாணக்கியனுக்கும் உயிர் ஆபத்து; சுமந்திரன் எம்.பி சபாநாயகரின் கவனத்திற்கு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமக்கும் சாணக்கியன் எம்.பிக்கும் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ சுமந்திரன் எம்.பி நேற்று சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

தன்னையும் சாணக்கியன் எம்.பியையும் பின்தொடர்ந்த கிழக்கு மாகாண பதிவிலக்கத்தை கொண்ட மோட்டார் சைக்கிளில் வந்தவர்களினால் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று சிறப்புரிமையை முன்வைத்து அவர் இதனை தெரிவித்தார்..

மேலும் பேசிய அவர்,...

2022 ஆகஸ்ட் 6 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தொடர்பில் சிறப்புரிமை விடயத்தை எழுப்பியிருந்தேன். அது ஒழுக்க நெறி மற்றும் சிறப்புரிமை குழு தொடர்பானது. இதன்படி ஒக்டோபர் 4 ஆம் திகதி அது தொடர்பான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி நான் அங்கு சென்றிருந்தேன். 'பெற்றி டீவி' அழைக்கப்பட்டு சான்று பகிரப்பட்டிருந்தாக முகநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் ஒரு அரசியல் கட்சியின் தலைவர், சிவனேசன்துரை சந்திரகாந்தன் குறித்த தவறான காட்சியை அனுப்பியுள்ளார். அதில் அவரின் குரலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பந்தன் எவருக்கும் பிரயோசனமும் இல்லை. வெறுமனே ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றார் என்றும் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பான சான்றுகளின் பிரகாரம் சிவனேசதுரை சந்திரகாந்தன் என்பவரால் இது மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை ஒக்டோபர் 5 ஆம் திகதி சாணக்கியனும் நானும் நண்பகல் 12.45 மணியளவில் ஹோட்டன் பிளேசில் கூட்டமொன்றில் இரண்டு தனிப்பட்ட வாகனங்களில் சென்றோம். நாங்கள் பயணித்துக் கொண்டிருந்த போது பாதுகாப்பு தரப்பினர் எங்களை மோட்டார் சைக்கிளொன்று பின் தொடர்ந்து வந்தது என்று தெரிவித்து அதன் புகைப்படத்தை எடுத்துள்ளனர். கிழக்கு மாகாணத்தின்

06

# சிறுமி துஷ்பிரயோகம்; வயோதிபர் கைது

**யாழ். விசேட நிருபர்**

சிறுமியை வன்புணர்வுக்கு உள்படுத்திய குற்றச்சாட்டில் வயோதிபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் இருபாலையைச் சேர்ந்த 73 வயது முதியவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

13 வயதுச் சிறுமி ஒருவர் வயோதிபரினால் வன்புணர்வுக்கு உள்படுத்தி கர்ப்பமாகியுள்ளார் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கடந்த வாரம் அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கோப்பாய் பொலிஸாருக்கும் அறிவித்திருந்தது.

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 21ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் அவ்வல் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி

நெறியற்றவர்களை ஒரு பணிக்குத் தேர்வு செய்வது கூடாது. அவர்கள் உலகத்தைப் பற்றிக் கவலைப்படாமல், பழிக்கு நாணாமல் செயல்படுவார்கள்.

# நிரந்தரமான தீர்வொன்று காணப்படுவதே ஒரேவழி!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் கடந்த மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமானது. அன்றைய தினமே இலங்கை விவகாரம் தொடர்பாக அறிக்கையும் வெளியிடப்பட்டு கடந்த ஆறாம் திகதி இலங்கை மீதான வாக்கெடுப்பு நடந்தது.

இதுவரை 13 தீர்மானங்கள் இப்பேரவையால் இலங்கை பொறுப்புக் கூற வேண்டும் என்பதற்காக நிறைவேற்றப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் பிரேரணைகள் வாக்கெடுப்புக்கு விடப்படும் காலம் பரபரப்பு நிறைந்ததாக காணப்பட்டது. பல்வேறு அமைப்புகள் ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவாகவும் எதிராகவும் பரப்புரைகள் செய்வதையும் பரபரப்பு செய்திகளாக நாம் பார்த்திருக்கிறோம்.

ஆனால் இம்முறை இத்தகைய பரபரப்புகளை ஜெனீவாவில் காண முடியவில்லை. எமது வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி ஜெனீவாவில் இலங்கை தொடர்பான பிரேரணையை இலாவகமாகக் கையாண்டதோடு, எந்த பரபரப்புக்கும் இடமளிக்காமல் இலங்கை பொறுப்புக் கூறுவதை நிர்ப்பந்திக்க முயலும் பிரேரணை வெற்றிபெறும் என்று காணொளி வாயிலாகக் கூறினார்.

அத்துடன் ஜெனிவா பேரவையில் பிரேரணக்கு ஆதரவாக செயல்படும் நாடுகள் பலம் பொருந்திய நிலையில் இருப்பதாகவும் தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தியதை நாம் பாராட்ட வேண்டும்.

இதுவரை இப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட அனைத்து இலங்கைக்கு எதிரான பிரேரணைகளும் வெற்றி பெற்றிருக்கின்றன. 2015 இல் பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க நிலைமையை சமாளிக்கும் வகையில் இலங்கை இணை அனுசரணையாளராக விளங்கும் என்று அறிவித்ததோடு, உள்ளகப் பொறிமுறைக்கும் இசைவு தெரிவித்திருந்தார். மேலும் காணாமற்போனோர் விவகாரத்தை கையாள்வதற்கு ஒரு அலுவலகமும் திறந்து வைக்கப்பட்டது.

வருடா வருடம் மனித உரிமைகள் பேரவையின் புதிய தீர்மானங்கள் கொண்டு வரப்படுவதும், அதை எதிர்த்தும் ஆதரித்தும் வாக்களிப்பதும் தொடர்கதையாகவே இருந்து வருகிறது. இது தொடர்கதையாக நடைபெறுவதும், பின்னர் அனைவரும் மறந்து விடுவதும் வாடிக்கையான விஷயமாகி விட்டது. அதேவேளை நாட்டின் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டை போடுவதாகவும் அமைந்திருப்பதையும் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு விஷயம் தீர்க்கப்பட வேண்டுமென்றால் அது தீர்க்கப்பட்டேயாக வேண்டும். இந்நாட்டு அரசியல்வாதிகள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து வந்திருப்பதே நாட்டின் இந்நிலைக்குக் காரணம். இதை இனிமேலும் தொடரத்தான் வேண்டுமா என்பதே கேள்வி.

அடுத்த வருடம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையைக் கண்டித்து மற்றுமொரு பொறுப்பு கூறச் செய்யும் பிரேரணை கொண்டு வரப்படலாம். இலங்கை அதை சாதாரணமாக எதிர்கொள்ளலாம். பிரச்சினை அதுவல்ல, அது ஏற்படுத்தும் பாதகமான விளைவுகளை அபிவிருத்தி விடயத்தில் நாடும் மக்களும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதுதான் விஷயம்

இப்பிரச்சினையை 2010 இல் நாம் துணிச்சலுடன் முகம் கொடுத்து முடிவுக்கு கொண்டு வந்திருக்க முடியும். 2009 இல் யுத்தம் முடிந்ததும் தமிழர் பிரச்சினைக்கான ஒரு இறுதித் தீர்வுத் திட்டத்தை இதயசுத்தியோடு முன்வைத்து நகர்வுகளை மேற்கொண்டிருந்தால், அன்றிருந்த வெற்றிக்களிப்பு மனநிலையில் சிங்கள மக்கள் அதை அங்கீகரித்திருப்பார்கள். ஆனால் வாய்ப்புகள் தவறவிடப்பட்டு விட்டன.

தமிழர் பிரச்சினையை துரும்புச் சீட்டாகப் பயன்படுத்துவதன் மூலம் சிங்கள அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, தமிழ் அரசியல் கட்சிகளும் நெடுங்காலமாக பலன் பெற்று வந்துள்ளன. எனினும் அரசியல் இலாபம் உண்டு என்பதால் தொடர்ந்து அதைத் தீர்க்காமல் வைத்துக்கொண்டிருக்க முடியாது.

பொருனாதார எழுச்சியை இந்நாடு வேண்டியிருக்கிறது. அந்த எழுச்சி புதிய அரசியல் சிந்தனைகளுடன் கூடியதாக இருந்தால் மட்டுமே வெற்றி சாத்தியமாகும். அப்படித்தான் ஏனைய நாடுகள் முன்னேற்றம் கண்டன. வழமையாக தமிழர் தொடர்பான பிரேரணையாகவே ஜெனீவா பிரேரணைகள் காணப்படும். இம்முறை வடக்கு கிழக்குடன் தெற்கும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இப்பிரச்சினைக்கு நிச்சயம் முடிவு காணப்பட வேண்டும் என்பதையே இது உணர்த்தியிருக்கிறது. இலங்கை மக்கள் இப்பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதாயின் அதற்கான பொருத்தமான பொருளாதாரத் திட்டம் புதிய அரசியல் சிந்தனையுடன் கூடியதாகவும், மதவாத, இனவாத அரசியலில் இருந்து விடுபட்டதாகவும் இருக்க வேண்டும் என்பது தவிர்க்க முடியாத விஷயமாகவே உள்ளது. அந்த இலக்கை நோக்கி இன்றைய அரசியல் நகரட்டும்!

editor.tkn@lakehouse.lk

# இனநல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் எட்டியாந்தோட்டை புனிதமரியாள் தேவாலய திருவிழா

எட்டியாந்தோட்டை புனித மரியாள் தேவாலயத்தின் 128 ஆவது வருடாந்த திருவிழா இன்று விமரிசையாக கொண்டாடப்படுகிறது. நாட்டில் அமைதிசமாதானம்சகோரத்துவம்சமய நல்லிணக்கங்களை வலியுறுத்தி பல்வேறு நிகழ்வுகளையும் இறை ஆசி வேண்டிய ஆன்மீக வழிபாடுகளையும் கடந்த பல தசாப்தங்களாக நடத்தப்பட்டு வந்துள்ளன.

இலங்கையில் கத்தோலிக்க மதம் பெருகி வந்த காலத்தில் மலையகத்தின் நுழைவாயிலான களனிவெலி பள்ளத்தாக்கின் எட்டியாந்தோட்டையில் 128 வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயம் மதவளர்ச்சிக்காக மட்டுமின்றி இப்பகுதியில் உள்ள அனைத்து இனமதமொழி சந்ததியினரை உருவாக்குவதற்காக பாடசாலைகளைக் கட்டடங்களை அமைத்துள்ளது. அன்றைய காலத்தில் அருட்தந்தையர்கள் பாரிய பணியாற்றியதன் பேரில் உருவானதுதான் எட்டியாந்தோட்டையில் இன்று இயங்கிக் கொண்டிருக்கும் என்.எம். பெரேரா சிங்கள தேசிய பாடசாலை, சிரிவர்தன சிங்கள மகாவித்தியாலயம்,புனித மரியாள் தமிழ் மகாவித்தியாலயம், தெகியோவிற்ற தமிழ் மகாவித்தியாலயங்களாகும்.

அத்துடன் இலங்கையின் பல பாகங்களில் கல்விமான்களாக இன்று சேவையாற்றுபவர்களை மட்டுமின்றி பல அரசியல் தலைவர்களை உருவாக்கிய புனிது கபிரியேல் கல்லூரி 'களனிவெலி பல்லத்தாக்கின்' பொக்கிசமாக பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

அகாலத்தில் அனைத்து இனமதமொழி பேசு



பவர்கள் 'ஒன்றாக' சேர்ந்து கல்வி பயின்ற புனித கபிரியேல் கல்லூரி அரசால் சுவீகரிக்கப்பட்ட பின்னர் மேற்குறிப்பிட்ட சிங்களதமிழ் பாடசாலைகளாக பிரிக்கப்பட்டு தற்பொழுது செயற்படுகின்றது குறிப்பிடத்தக்கது.

128 வருடங்களாக இந்த ஆலயத்தில் செயற்பட்ட 40 இற்கும் மேற்பட்ட அருட்தந்தையர்கள் ஆற்றிய அளப்பரிய சேவைகள் நிமித்தம் இன்றும் அட்டன்கொழும்பு வீதியில் கம்பீரமாக யட்டிந்தோட்டையில் காட்சி தருகிறது இந்த ஆலயம்.

1970 மற்றும் 1980 களுக்கு முன்பு தெகியோவிற்றறுவன்வெல்லபுளத்கொகுப்பிட்டியவான வெற்றிலையுர் போன்ற பங்குகள் இந்த பகுதிகளுக்கான 50 இற்கும் மேற்பட்ட தோட்டங்கள் இந்த பங்கின் கீழ் இயங்கி வந்தமையும் 'மலையக காந்தி' என்று அழைக்கப்பட்ட சேவையாற்றிய அருட்தந்தை அன்ஜலோ ஸ்டப்பனிஸ் காலத்தில் அதேபோல் அருட்தந்தை டட்லி அத்தநாயக்க பணியாற்றிய காலத்தில் இயங்கிய இந்த இடங்கள் வெவ்வேறு பங்குகளாக பிரிக்கப்பட்டு தற்போது தனிப் பங்குகளாக தேவாலயங்களைக் கொண்டு செயற்பட்டு வருகின்றன.

இந்த மறைமாவட்டத்தின் முதல் ஆயராக( மேற்றிராணியாராக) நியமிக்கப்பட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் இரத்தினபுரி மறைமாவட்டத்தின் கீழ் வரும் அனைத்து ஆலயங்களது வளர்ச்சிக்கும் குறிப்பாக பெருந்தோட்ட மற்றும் கிராமிய மக்களது ஆன்மீகசமூகபொருளாதார மேம்பாட்டிற்காகவும் தனது பங்களிப்பினை ஆற்றியது குறிப்பிடத்தக்கது.

நாட்டில் இடம்பெற்ற கொடூர யுத்தகாலத்தின்போது நிரந்தர அமைதிசமாதானம், இனப்பிரச்சினைக்கான தீர்வு வேண்டி பிரார்த்தனை ஆன்மீக வழிப்பாடுகளை நடத்தியது மட்டுமின்றி நாட்டில் ஏற்படும் பல்வேறு அனர்த்தங்கள்அழிவுகளிலிருந்து மக்களையும்மண்ணையும் காத்தருள வேண்டி திருப்பலிப்பூசை மற்றும் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன.

இந்து மக்களால் கொண்டாடப்படும் தைப் பொங்கல்,தீபாவளிதிருநாள்,தமிழ்சிங்களசித்திரைப் புத்தாண்டு போன்ற திருநாட்களை தமிழ் சிங்கள கத்தோலிக்க மக்களது பங்களிப்புடன் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. 128வது ஆண்டுவிழா கடந்த மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பொருளாதார நெருக்கடிகள் வெகுவிரைவில் நீங்கி மக்கள அமைதியுடன் வாழ இறையருள் வேண்டி பிரார்த்னைகள் தொடர்ச்சியாக தினந்தோறும் நடாத்தப்பட்டு வருவது முக்கியமானது.

பங்குத் தந்தை அருட்திரு.சஞ்சீவபீரிஸ், உதவி பங்குத் தந்தை அருட்திரு. டென்சின் விக்கரமநாயக்க வழிகாட்டலில் கொழும்பு புனித பிலிப்நேரிஸ் ஆலய அருட்தந்தை அன்டன் ரொகான் அடிகளார் திருப்பலிப்பூசைகளை தமிழ்சிங்கள மொழிகளில் நடத்தி வருகின்றார். சனிக்கிழமை வேஸ்பர்ஸ் ஆராதனை இரத்தினபுரி ஆயர் இல்லத்தின் அருட்தந்தை சேன் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும். திருவிழா திருவழிபாடு ஆராதனைகள்கேகாலை குருமட இயக்குணர் ரஞ்சன்மால் மொராயஸ் தலைமையில் இடம்பெறும்.

திருவிழாவின் விசேட அம்சமாசமாக செபமாலை அன்னையின் திருச்சூருப சுற்றுபிரகாரம் யட்டியாந்தோட்டை நகர்வலம் வருவதுடன் நாட்டு மக்கள் முகம் கொடுக்கும் பல்வேறு நெருக்கடிகள் நீங்கி நாடு மீண்டும் வழமைநிலமைக்கு வர விசேட பிரார்த்தனையும் நடத்தப்பட்டு அன்னதானமும் வழங்கப்படும்.

**எஸ்.பி.அந்தோனிமுத்து...**
தொடர்பாடல் இனைப்பாளர்
இரத்தினபுரி மறைமாவட்டம்

# துபாயிலும் களைகட்டிய நவராத்திரி விழா



இந்துக்களின் மகா நவராத்திரிவிழா இலங்கை, இந்தியாவில் மாத்திரம் அல்ல உலகெங்கும் கொண்டாடப்பட்டது. கடல் கடந்த துபாய் நாட்டிலே 'நவராத்திரி மண்டபம் சங்கீதோற்சவம்' என்ற இசை நிகழ்ச்சி சார்ஜாவில் மிக சிறப்பாக நடைபெற்றது. இதனை இந்திய துபாய் கன்சுலர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. அந்த விழாவிலே 'சங்கீதார்ச்சனா' என்ற நிகழ்ச்சி மாணவி நகுலன் ஹிருஷ்ரிதா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு இந்திய துபாய் கன்சுலர் நாயகம் டொக்டர் அமான் பூரி பிரதம அதிதியாக கலந்து கொண்டு பரிசு பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.





இந்த இசை நிகழ்ச்சிக்கான தயார்படுத்தல்கள் இந்திய கேரளாவைச் சேர்ந்த ஆசிரியையினால் பிரபல பாடகர் டாக்டர் உன்னிகிருஷ்ணனின் மேற்பார்வையில் நடைபெற்று வந்தன.

இந்த சங்கீதார்ச்சனாவிலே இலங்கை, இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளைச் சேர்ந்த மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

இலங்கையின் மட்டக்களப்பு அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஹிருஷ்ரிதா நகுலன் அங்கு சான்றிதழை பெறுவதை படத்தில் காணலாம்.

**வி.ரி.சகாதேவராஜா...**

# பாலமுனையில் சிறுவர் தினத்தை முன்னிட்டு கலை நிகழ்ச்சிகள்

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாலமுனை பிரதேசத்தில் மாணவர்களின் நன்மை கருதி லீப் கல்வி நிலையம் பல்வேறு கல்விச்சேவைகளை வழங்கி வருகின்றது.

அந்த வகையில் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான வடிவமைக்கப்பட்ட வகுப்பறைகளை கொண்ட பாலர் கல்வி நிலையத்தினை லீப் கல்வி நிலையம் நடத்தி வருகின்றது.

உலக சிறுவர்தினத்தை முன்னிட்டு லீப் கல்வி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர்தின நிகழ்வும் கலைநிகழ்ச்சியும் லீப் கல்வி நிலையத்தின் பசுமைப் பூங்கா திறந்த வெளியரங்கில் இடம்பெற்றன.

லீப் கல்வி நிலையத்தின் பணிப்பாளர் எம்.ஜே.எம்.றிபாயத்துள்ளா ஆசிரியர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விசேட சொற்பொழிவாளராக அஷ்ஷெய்க் எம்.ஜே.எம். நிஹ்மதுல்லாஹ் (நழீமி) மற்றும் கல்வி நிலையத்தின் நிருவாகிகள் ஆசிரியர்கள், பெற்றோர் என பலர் கலந்து கொண்டார்கள்.





இந்நிகழ்வில் சிறுவர்கள் ஊர்வலமாக சென்றதுடன் சிறுவர்களது கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. அத்துடன் அவர்களுக்கான பரிசில்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஐ.ஏ.ஸிறாஜ்...**
(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

# கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இந்து நாகரிக பாட செயலமர்வு



கல்வி அமைச்சின் சமய விழுமியங்கள் பிரிவு ஏற்பாடு செய்த க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான இந்து நாகரிகம் பாட செயலமர்வு நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை வலயத்தில் இம்முறை க.பொ.த உயர்தர பரீட்சையில் இந்து நாகரிக பாடத்தில் தோற்ற இருக்கின்ற 92 மாணவர்களுக்கான இந்த செயலமர்வு அதிபர் சீ. பாலசிங்கன் தலைமையில் நடைபெற்றது .

கல்வி அமைச்சிலிருந்து சமயங்கள் விழுமிய பிரிவின் பிரதிக்கல்வி பணிப்பாளர் எஸ் சுந்தரலிங்கம் வளவாளராக கலந்து கொண்டார். அங்குரார்ப்பண நிகழ்வில் சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எஸ். எம். எம். அமீர், சம்மாந்துறை வலய உதவிக் கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ஆசிரிய ஆலோசகர்களான கே.இரத்னேஸ்வரன், எஸ்.அர்ஜுனன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

சம்மாந்துறை வலயத்திலுள்ள 8 தமிழ் பாடசாலைகளை சேர்ந்த 92 மாணவர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள்.

**காரைதீவு குறூப் நிருபர்...**





2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# உலக ரசிகர்களையே தன்வசமாக்கிய 'பாப்லோ நெருடா' எனும் பெருங்கவி

## உலக கவி பாப்லோ நெருடா மறைந்து 49 ஆண்டுகள்



**நெருடாவின் கவிதைகள் இருபதாம் நூற்றாண்டில் உலக மொழிகள் எல்லாவற்றிலும் வெளிவந்த சிறப்பினால், மாபெரும் கவிஞர் என லத்தீன் அமெரிக்க எழுத்தாளராகிய கேப்ரியல் கார்சியா மார்க்வெஸ், நெருடாவினைப் புகழ்கின்றார்.**

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர் இவராவார். கவிஞராக மட்டுமல்லாது, சமூக உணர்வு கொண்ட போராளியாகவும், மார்க்சிய தத்துவங்களில் ஈடுபாடு கொண்டவராகவும் திகழ்ந்தவர். பாப்லோ நெருடா, (Pablo Neruda, ஜூலை 12, 1904 – செப்டம்பர் 23, 1973) என்ற புனைபெயர் கொண்ட ரிக்கார்டோ இலீசர் நெப்டாலி ரீயஸ் பொசால்தோ (Ricardo Eliecer Neftal□ Reyes Basualto), சிலி நாட்டில் பிறந்தவர்.

பாப்லோ நெருடாவின் முதல் கவிதைத் தொகுப்பு, 19ஆம் வயதில் வைகறைக் கதிர்கள் (Books of Twilights) என்ற பெயரில் 1923 ஆம் ஆண்டு வெளிவந்தது. நெருடாவின் ‘இருபது காதல் கவிதைகளும் ஒரு விரக்தி பாடலும்’ என்ற கவிதை தொகுப்பு ஸ்பானிய மொழியில் பெரும் கிளர்ச்சியையும், பரபரப்பையும் ஊட்டியது.

இத்தொகுப்பு வெளியிடும் போது நெருடாவின் வயது இருபது. காதல் கவிதைகளில் அதிர்ச்சியும் நேரடித்தன்மையும் கொண்ட அத்தொகுப்பு ஸ்பானிய மொழி பேசும் நாடுகளில் நெருடாவினை மேலும் பிரபலமாக்கியது.

1920ம் ஆண்டு கவிதை எழுதுவதற்காக, செக்கோஸ்லாவாகியா எழுத்தாளரான ஜோன் நெருடாவின் பெயரால் உந்தப்பட்டு, தன் பெயரையும் பாப்லோ நெருடா என்ற புனைப்பெயரில் வைத்துக் கொண்டார்.

1904 ஆண்டு, ஜூலை 12 ஆம் திகதி சிலி நாட்டில் உள்ள பாரல் என்ற ஊரில் பாப்லோ நெருடா பிறந்தார். இவர் பிறந்த சில நாட்களிலேயே தாய் மறைந்தார். பாப்லோ நெருடா முதல் முயற்சியாக தனது எட்டாம் அகவையில் எழுதிய கவிதை, தன் தாயைப் பற்றியதே. கவிதை எழுதுவதில் நாட்டமும் திறனும் கொண்டவர். சிறு வயதிலேயே இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர். 10 வயது முதலே பலரால் அறியப்படும் கவிஞராகப் புகழ்பெற்றார்.

ஆயினும் பாப்லோ நெருடாவின் தந்தை இவரது எழுத்தையும் இலக்கிய நாட்டத்தையும் எதிர்த்தார். ஆயினும் இவரது இலக்கிய ஆர்வம் தடைப்படவில்லை. தந்தையின் கோபத்துக்கு ஆளாகாமல் இருக்க 'பாப்லோ நெருடா' என்ற புனைபெயரில் எழுதத் தொடங்கினார்.

எரிமலையும், கனமழையும், சுரங்கங்களும் சூழ்ந்த சிலி நாட்டின் தென் பகுதியில் ஓர் ஏழை ரயில்வே கூலித் தொழிலாளிக்கு மகனாகப் பிறந்து, துன்பத்தில் வளர்ந்து, உலக நாடுகள் பலவற்றுள் சிலி நாட்டுத் தூதராகப் (Consul) பதவி வகித்து, உலகப் பெருங்கவிஞருள் ஒருவராக வளர்ந்து, நோபல்பரிசு பெற்ற பெருங்கவிஞரே பாப்லோ நெருடா.

பாப்லோ நெருடா மார்க்சியத் தத்துவங்களில் ஈடுபாடு கொண்டிருந்தார். சிலியில் கம்யூனிஸ்ட் கட்சி சட்டவிரோதம் என அறிவிக்கப்பட்டது. இவரை கைது செய்ய பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது. நண்பர்கள் உதவியுடன் மாதக்கணக்கில் தலைமறைவாக

**சிலி நாட்டில் பிறந்து இலங்கையிலும் தூதுவராக பணியாற்றிய கவிஞன்**

இருந்தவர், பின்னர் அர்ஜென்டினாவுக்கு தப்பினார். 1971 இல் பாரீஸில் தூதராகப் பணியாற்றிய போது, இவருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. .

காதல், யதார்த்தம், அரசியல் என பல சிந்தனைகளை இவரது கவிதைகள் மையமாகக் கொண்டிருந்தன. கவிதைகளை பச்சை மையில்தான் எழுதுவார். ஆசை மற்றும் நம்பிக்கையின் சின்னம் பச்சை என்பது அவரது கருத்து.

கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' பாடல் வரிகளைப் போலவே அமைந்துள்ள 'பூமியின் சருமம் உலகெங்கும் ஒன்றுதான்' (The skin of the earth is same everywhere)' என்ற இவரது கவிதை வரிகள் பிரபலமானவை. '20 ஆம் நூற்றாண்டின் மாபெரும் கவிஞர் என்று புகழப்பட்ட பாப்லோ நெருடா 69 வயதில் (1973) மறைந்தார்.

1924 இலிருந்து 1934 வரை அவருடைய வாழ்க்கை ஒரே அலைக்கழிப்பாக இருந்தது. 1927 இல் பர்மாவிலும், 1928 இல் இலங்கையிலும், 1930 இல் ஜாவாடடேவியாவிலும், 1931 இல் சிங்கப்பூரிலும், 1933 இல் அர்ஜெண்டைனாவிலும் சிலிநாட்டுத் தூதுவராக (Consul)பணி புரிந்தார். ஐந்தாண்டுகள் கிழக்காசிய நாடுகளில் வாழ்ந்தபோது தனிமை அவரை மிகவும் வருத்தியது.

தாய்மொழியான ஸ்பானிஷ் மொழியை யாரிடமும் பேச வாய்ப்பில்லாமல் தவித்தார். தூதரக வருமானம் கௌரவமாக வாழப் போதியதாக இருக்கவில்லை. அதனால் சில அவமதிப்புக்களுக்கும் ஆளாக வேண்டியிருந்தது. தாம் அப்போதிருந்த நிலையை விளக்கி ஒரு நண்பருக்கு எழுதிய கடிதத்தில் ‘தெருநாய்களின் துணையோடு வாழ்ந்தேன்’ என்று வருந்தி எழுதியிருக்கிறார்.

வியட்நாம் காடுகளில் சுற்றியலைந்ததைப்பற்றித் தமது பிற்காலக்கவிதை யொன்றில் குறிப்பிடும் போது “என் வயதில் இருபதாண்டுகள் கூடிவிட்டன; சாவை எதிர் நோக்கிக் காத்திருந்தேன்; என் மொழிக்குள் நான் சுருங்கிக் கொண்டேன்” என்று எழுதுகிறார்.

### இலங்கையில் தூதராக பணி:

இலங்கையில் தூதராக இருந்தபோது, இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். நேருவைக் கண்டு பேசவிரும்பி டில்லி சென்றார். நேரு முதலில் சந்திக்க மறுத்து விட்டார். இரண்டாம் முறை நேருவைக் கண்டு பேசினார். ஆனால் நேருவினால் அவரைக் கவர முடியவில்லை. 1933 இல் அர்ஜெண்டைனாவில் தூதராக இருந்தபோது ஸ்பெயின் நாட்டின் தலைசிறந்த கவிஞரான லார்காவை போனஸ் அயர்லில் சந்தித்து நெருங்கிய நண்பரானார். அச்சந்திப்பைப்பற்றியும், அச்சந்திப்பின் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளைப்பற்றியும் கவிதை நடையில் நெருடா தன் வரலாற்று நூலில் எழுதியுள்ளார்.

ஸ்பெயினில் வகித்து வந்த தூதர் பதவி பறிபோனதும் நெருடா பாரிசில் (193739) சென்று தங்கினார். அப்போதுதான் அவருள்ளத்தில் அவரது சிறந்த படைப்பான ‘சிலிப் பெருங்காப்பியம்’ உருப்பெற்றது. அதுவே பத்தாண்டுகள் கழித்துப் பதினைந்து பாகங்களைக் கொண்ட ‘பொதுக் காண்டமாக’ வெளிவந்தது.

இப்பத்து ஆண்டுகளில் பொதுவுடைமைக் கட்சியில் ஈடுபாடு கொண்டு தீவிர அரசியல்வாதியானார். 1940 இலிருந்து 1943 வரை மூன்றாண்டுகள் மெக்சிகோவில் தூதராகப் பணிபுரிந்தார். அப்போது நாஜிகளால் தாக்கப்பட்டார். 1945 இல் பொதுவுடைமைக் கட்சி உறுப்பினராகப் போட்டியிட்டு சிலிப்பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1948 இல் சிலிநாட்டு ஜனாதிபதியாக இருந்த கான்சலஸ் விடெலா (Gonzaine Videia) பொதுவுடைமைக் கட்சியோடும் அக்கட்சி ஆட்சியிலிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் தமக்கிருந்த உறவை முறித்துக் கொண்டார். ஜனாதிபதியின் இச்செயலை நெருடா வெளிப்படையாகக் கண்டித்தார். இதனால் சிலி அரசாங்கம் இவரைச் சிறை செய்ய முயன்ற போது, நெருடா தலைமறைவானார். பொதுவுடைமைக் கட்சித் தோழர்களின் வீடுகளில் மறைந்திருந்து, கடைசியில் நாட்டைவிட்டு வெளியேறினார். அடுத்த நான்கு ஆண்டுகள் தென் அமெரிக்க நாடுகளிலும், ஐரோப்பாவிலும் நீண்ட பயணங்களை மேற்கொண்டார்.

அரசியல் நெருக்கடி மிக்க இப்போராட்டக் காலமே நெருடாவின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க காலகட்டம், இயற்கையையும் காதலையும் பாடிக்கொண்டிருந்த நெருடா அரசியற் கவிஞனாக உருப்பெற்றார். அவருடைய கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது போல், கவிதைச் சிந்தனையிலும் மாற்றம் ஏற்பட்டது.

நெருடா தன் கவிதைகளைத் தூயவை, தூய்மையற்றவை (Pure and impure poetry) என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிறார். உலக முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு பாடப்படும் கவிதைகளே தூய்மையானவை என்பது நெருடாவின் கருத்து. மாணவப் பருவத்தில் காதலை மையப்படுத்தித் தாம் எழுதிய முதல் இரண்டு கவிதைத் தொகுப்பையும் தூய்மையற்றவை என்று அவரே ஒதுக்கி விடுகிறார்.

பாப்லோ நெருடா இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பாகத் தன் கல்லறைப்பாட்டை (epitaph) ‘ஒளியின் ஜீவன் (Animal of Light) என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார்.

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞராக, உலக மொழிகள் எல்லாவற்றிலும் பாப்லோ நெருடாவின் கவிதைகள் வெளிவந்துள்ளன. இந்த நூற்றாண்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் கவிஞராக பாப்லோ நெருடா மிளிர்கின்றார்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# யூனியன் அஷ்யூரன்ஸ் லைஃவ்ஸ்டைல் போனஸ்–2022 ஊடாக வாடிக்கையாளர்களுக்கு வெகுமதிகள்

**யூனியன் அஷ்யூரன்ஸ், தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாகவும் லைஃவ்ஸ்டைல் போனஸ் 2022 திட்டத்தை முன்னெடுத்து, வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான அன்பளிப்புகளை வழங்கியிருந்தது.**

2022 ஜனவரி 1ஆம் திகதி முதல் மார்ச் 31ஆம் திகதிக்குட்பட்ட காலப்பகுதியில் ஆயுள் காப்புறுதியைக் கொள்வனவு செய்திருந்த தகைமை வாய்ந்த வாடிக்கையாளர்களிலிருந்து 2022 ஜுன் மாதம் இடம்பெற்ற அதிர்ஷ்டசாலி வெற்றியாளர் தெரிவினூடாக 50 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.



முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற வெற்றியாளர்கள் தமது பரிசுகளை பெற்றுக் கொள்கின்றனர்.

முதலாமிட வெற்றியாளராக, சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த டபிள்யு.ஐ.டி.வாஸ் தெரிவு செய்யப்பட்டு, iPhone 13 Pro Max – 512GB ஐ பரிசாக பெற்றுக் கொண்டார். இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்ட அவிசாவளையைச் சேர்ந்த எஸ்.பி.வீரசிங்கவுக்கு, iPad Air 2021 – 64GB (cellular & wifi), an Apple Pencil 2nd Gen and a Magic Keyboard வழங்கப்பட்டன. மூன்றாமிடத்துக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பி.புஷ்பலதா தெரிவு செய்யப்பட்டு, 55அங்குல Samsung ஸ்மார்ட் தொலைக்காட்சி ஒன்றைப் பெற்றுக் கொண்டார்.

ஏனைய வெகுமதிகளில் மடிக்கணனிகள், சினமன் ஹோட்டலிலிருந்து வவுச்சர்கள், 43 அங்குல ஸ்மார்ட் தொலைக்காட்சிகள், Samsung Aseries ஸ்மார்ட்ஃபோன்கள் மற்றும் வயர்லெஸ் சார்ஜிங் உடனான UV Sterilizers போன்றன அடங்கியிருந்தன. இவற்றை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில், வெற்றியீட்டியவர்களின் அருகாமையிலுள்ள யூனியன் அஷ்யூரன்ஸ் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், “எமது வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியாக சிறந்த பெறுமதியை ஏற்படுத்திக் கொடுப்பது யூனியன் அஷ்யூரன்ஸைச் சேர்ந்த எமக்கு முன்னுரிமையானதாக அமைந்திருப்பதுடன், இந்த ஆண்டின் லைஃவ்ஸ்டைல் போனஸ் திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளதையிட்டு பெருமை கொள்கின்றோம்” என்றார்.

பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மஹேன் குணரட்ன தெரிவிக்கையில், “இந்த சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர்களுக்கு லைஃவ்ஸ்டைல் போனஸ் உடன் வெகுமதிகளை வழங்க முடிந்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். எமது வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந்த அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நிறுவனம் தன்னை அர்ப்பணித்துள்ளது” என்றார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் WP/GT/5609 எனும் பதவிலக்கத்தின் கீழ் யூனியன் அஷ்யூரன்ஸ் தன்னைப் பதிவு செய்துள்ளதுடன், லைஃவ் ஸ்டைல் போனஸ் திட்டத்தை முன்னெடுப்பதற்காக அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள சகல தேவைப்பாடுகளையும் நிவர்த்தி செய்துள்ளது. அதன் பிரகாரம், அதிர்ஷ்டசாலி தெரிவை நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்களும், சுயாதீன வெளியக நபர்களும் முன்னெடுத்திருந்ததுடன், அதனூடாக, இந்தச் செயன்முறையின் முழுமையான வெளிப்படைத் தன்மை மற்றும் நேர்த்தித் தன்மை உறுதி செய்யப்பட்டிருந்தது.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. துறையில் மூன்று தசாப்த கால வெற்றிகரமான சேவையை யூனியன் அஷ்யூரன்ஸ் பூர்த்தி செய்துள்ளதுடன் சந்தை மூலதனவாக்கமாக ரூ. 15.7 பில்லியனைக் கொண்டுள்ளது. 2022 ஜுன் மாதமளவில் ஆயுள் நிதியமாக ரூ. 51.5 பில்லியனையும் கொண்டிருந்தது. இலங்கையர்களின் கனவுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், கல்வி, ஆரோக்கியம், பாதுகாப்பு, ஓய்வூதியம் மற்றும் முதலீடு போன்ற ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடைய தீர்வுகளை இலங்கையர்ளுக்கு வழங்குகின்றது.

# சட்டபூர்வ ஓய்வூதியத் தொகை வழங்குவதை இனிமேலும் இழுத்தடிப்பது முறையானதல்ல!

**இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும். ஒக்டோபர் 08ஆம் திகதி ஓய்வூதிய தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தினம் நாட்டுக்காக தம்மை அர்ப்பணித்து சேவையாற்றிய சிரேஷ்ட பிரசைகளின் சேவையினால் நாடு அடைந்த பலன்களை நினைவு கூர்வதற்காகவும், இந்நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்காக பணியாற்ற அரசசேவையில் இணைந்து அண்ணளவாக மூன்று தசாப்த்தகாலம் தமது உச்சப் பங்களிப்பை வழங்கி ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரசைகளுக்கு கௌரவம் வழங்கும் நோக்கிலும் அனுஷ்டிக்கப்படுகின்றதாக சொல்லப்படுகின்றது.**

இலங்கையில் ஒக்டோபர் 2022 இல் 689 770 ஓய்வூதியர்களுக்காக அண்ணளவாக மூன்று பில்லியன் ரூபா செலவு செய்யப்படுவதாகவும் இது அரசின் மீண்டு வரும் செலவீனத்தில் 12 வீதத்திற்கும் 15 வீதத்திற்கும் இடைப்பட்ட தொகையாக உள்ளதாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஓய்வூதியர்களுக்கான செலவு ஒதுக்கீடுகள் பெருமையாக காட்டப்பட்டிருந்தாலும் 2016 இலிருந்து 2019 வரை ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு 1.1.2020 முதல் வழங்க வேண்டிய சட்டபூர்வ ஓய்வூதியத்தொகையை இதுவரை அரசு வழங்காது இருக்கின்றமை இந்த ஓய்வூதிய தினத்தில் நினைவு கூரப்படவேண்டிய விடயமாகவும் உள்ளது.

இதன் மூலம் அவரவர் பெற்ற சம்பள அளவுத் திட்டங்களுக்கமைய அண்ணளவாக ரூபா 6000 முதல் ரூபா 25000 வரை மாதாந்தம் ஓய்வுநிலையாளர்கள் பெறவேண்டிய ஓய்வூதிய கொடுப்பனவுகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. மாறி மாறி ஆட்சிக்கு வந்த அமைச்சரவைகளின் முரண்பட்ட தீர்மானங்களே இந்த பாதிப்புக்கு காரணமாகியுள்ளன.

இவ்வாறாக பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் தொகை 100869 ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.. ஓய்வூதிய திணைக்களத்தால் கணக்கிடப்பட்ட மொத்த ஓய்வூதியர்களில் அண்ணளவாக 16.6 சதவீதத்தினர் தமக்கு கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகள் மறுக்கப்பட்டதால் அமைதியாக வாழவேண்டியகாலத்தில் மனவிரக்தியோடும், கவலையோடும் வாழ்வதோடு, இன்றைய பொருளாதார நெருக்கடியால் எழுந்த வாழ்கைச் செலவு உயர்வை சமாளிக்க முடியாது கடினமான வாழ்க்கைப் போராட்டத்தையும் நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.




இந்த செயற்பாட்டை ஆட்சேபித்து ஓய்வுபெற்றவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பொன்று உருவாக்கப்பட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பல வீதிப் பேரணிகளும்,, உண்ணாவிரதப் போராட்டங்களும்,, கொடுப்பனவை வழங்குமாறு ஜனாதிபதிக்கு ரெலிமெயில் அனுப்பும் போராட்டமும் இது தொடர்பாக நடத்தப்பட்டுள்ளன.

நாட்டு நிலைமையை காரணம் காட்டி உரிய ஓய்வூதிய தொகையை வழங்க பின்னடித்து மறுத்து வருவது ஏற்கத்தக்கவிடயமல்ல.

ஓய்வூதிய தினம் நாட்டுக்காக தம்மை அர்ப்பணித்து சேவையாற்றிய சிரேஷ்ட பிரசைகளின் சேவையினால் விளைந்த பலன்களை நினைவு கூருவதற்காகவும், சிரேஷ்ட பிரசைகளுக்கு கௌரவம் வழங்கும் வகையிலும் இத்தினம் அனுஷ்டிக்கப்படுவதாக கூறிக் கொண்டு மறுபுறம் ஓய்வூதியர்களின் கொடுப்பனவை வழங்க மறுத்து வருகின்றமை ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரசைகளுக்கான கௌரவமாக அமையாது. எனவே இத்தினத்தில் மறுக்கப்பட்ட ஓய்வூதியத்தை வழங்க அரசும், அமைச்சரவையும் வேண்டிய தீர்மானங்களை மேற் கொண்டு ஓய்வூதிய தினம் ஓய்வூதியர் அனைவரினதும் ஓய்வுகாலம் ஆரோக்கியமானதாகவும், மகிழ்ச்சியானதாகவும் அமைய வழிவகை செய்தல் வேண்டும்.

**ஆ.இளங்கோ...**
(ஓய்வு நிலை வலயக்கல்விப் பணிப்பாளர்)
அளவெட்டி, யாழ்ப்பாணம்.

# பிரீமா ஸ்டெல்லா டெய்ரி தயாரிப்புக்களின் வியாபாரக்குறி தூதராக சாமிக்க கருணாரட்ண

**விளையாட்டு அரங்கில் சகல துறை ஆட்டக்காரரான சாமிக்க கருணாரட்ண பல விளையாட்டுகளில் சிறந்து விளங்கினார். ஒரு தேசிய பூப்பந்தாட்ட வீரராகவும், ஈட்டி எறிதலில் ஜூனியர் தேசிய சாம்பியனாகவும், களத்தில் அவரது ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்புத் தன்மை காரணமாகவும் ஒரு முழு தேசத்தினதும் இதயங்களையும் மனதையும் வென்ற தேசிய கிரிக்கெட் வீரராகவும் தன் அடையாளத்தை உருவாக்கியுள்ளார்.**

தனது கருத்துக்களை சாமிக்க கருணாரட்ண பகிர்ந்துக் கொள்கையில்:“ நான் சிறுவனாக இருந்ததிலிருந்து, எனது சிறந்த செயல்திறனை ஆதரிக்கும் மிகவும் ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையைத் தழுவ கற்றுக் கொண்டேன். அத்தகைய பார்வையின் ஊடாக பிரீமா ஸ்டெல்லா டெய்ரி உடனான வியாபாரக்குறி தூதராகப் பார்க்கும்போது, இலங்கையர்களை ஆரோக்கியமாக சாப்பிடவும், சுறுசுறுப்பாக இருக்கவும், வாழ்க்கையை ஆராய்வதற்கு ஊக்குவிக்கவும் இவ்வியாபாரக்குறி ஆழமாக தன்னை ஈடுபடுத்தியுள்ளது என்பது என்னால் குறிப்பிடத்தக்கதொன்றாக இருக்கின்றது” எனக் கூறினார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் தனது பாடசாலை நாட்களில் தடகள, பூப்பந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் அணிகளுக்கு தலைமை தாங்கி விளையாட்டுத்துறையில் நட்சத்திரமாக திகழ்ந்துள்ளார். றோயல் கல்லூரியில் விளையாட்டு வீரர்களுக்கான சாதனையின் உச்சமான றோயல் கிரவுன் விருது அவருக்கு இரண்டு முறை வழங்கப்பட்டது.

உள்நாட்டு வள மூலதாரங்களுடன் தயாரிக்கப்படுகின்ற புதிய பாலின் நலச்செழுமையுடன், எஸ்.எல்.எஸ்சான்றளிக்கப்பட்ட தயிர் உள்ளிட்ட பிரீமா ஸ்டெல்லா பால் பொருட்கள், குழந்தைகளின் ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறைக்கு அத்தியாவசியமான புரதத்தின் முக்கிய ஜீவாதாரத்தை வழங்குகின்றது.

பிரீமா ஸ்டெல்லா டெய்ரி, பிரீமா குழுமம் இலங்கை குழும பொது முகாமையாளர லோரன்ஸ் சான் புதிய வியாபாரக்குறி தூதர் நியமித்தமை குறித்து கருத்து தெரிவிக்கையில் “இன்று, பிரீமா ஸ்டெல்லா டெய்ரியின் புதிய வியாபாரக்குறி தூதரை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். நேர்மறையான மாற்றத்தை கற்பனை செய்யும் ஒரு வியாபாரக்குறியாக, பிரீமா ஸ்டெல்லா டெய்ரி, இளம் தலைமுறையினரை ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க தொடர்ந்து ஊக்குவிப்பதால், சாமிக்க கருணாரட்னுடனான எங்கள் கூட்டாண்மை சரியான திசையில் செல்வதற்கான ஒரு படியாகும் என்று நாங்கள் நம்புகிறோம்” எனக் கூறினார்.




இலங்கை அக்ரோ இண்டஸ்ட்ரீஸ், பிரீமா குழும இலங்கை துணை பொது முகாமையாளர் சஜித் குணரத்ன கருத்து தெரிவிக்கையில் “ சாமிக்க கருணாரட்னுடனான புதிய கூட்டு, உடல்நலம் மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கையை மையமாகக் கொண்ட ஒரு வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதற்கான வியாபாரக் குறியின் பார்வையை மேலும் மேம்படுத்துவதுடன் ஆர்வமுள்ள புதிய தலைமுறை விளையாட்டு வீரர்களை அவர்களுக்கான மிக உயர்ந்த நிலை மற்றும் சிறந்த செயல் திறனை அடைய ஊக்குவிக்கிறது” எனக் கூறினார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் மீதான விவாதம் அனைத்து கட்சிகளின் இணைக்கப்பாட்டுடனேயே ஒத்திவைப்பு

**- சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன**

லோரன்ஸ் செல்வநாயகம்

அனைத்து கட்சிகளின் இணக்கப்பாட்டுடனேயே அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் மீதான சபை விவாதம் ஒரு வார காலத்திற்கு ஒத்திப்போடப்பட்டது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் விமல் வீரவன்ச எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் வகையிலேயே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

கட்சித் தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவின் அழைப்பின்படி சட்டமா அதிபரும் கலந்து கொண்டுள்ளார். நீண்ட கலந்துரையாடலுக்குப் பின்னரே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அந்த தீர்மானத்திற்கு எதிர்க்கட்சியின் பிரதம கொரடா உட்பட அனைத்து கட்சித் தலைவர்களும் இணக்கம் தெரிவித்ததாகவும் சபாநாயகர் நேற்று சபையில் தெரிவித்தார்.

விமல் வீரவன்ச எம்பி தமது கேள்வியின் போது,

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம் பெறவிருந்த நிலையில் திடீரென அது ஒத்திப் போடப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டத்தின் போது அவ்வாறு ஒருமித்த தீர்மானம் எடுக்கப்படவில்லை என்பது எனக்கு தெரியும். ஒரு சிலரின் விருப்பத்திற்கு இணங்கவே இவ்வாறு அந்த விவாதம் ஒரு வார காலத்திற்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது. அது தொடர்பில் சபாநாயகர் சபையில் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் விமல் வீரவன்ச கேட்டுக் கொண்டார். அதற்கு பதில் அளிக்கும் போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

எவ்வாறெனினும் அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் மீதான விவாதம் அடுத்த பாராளுமன்ற அமர்வின் போது விவாதத்துக்கு எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்களது...

பாராளுமன்றத்தில் நேற்று அது தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி முன்வைத்த கூற்றுக்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த பிரச்சினைகளை நாம் குறைத்து மதிப்பிடவில்லை என தெரிவித்த அமைச்சர் தனிப்பட்ட விதத்திலும் அது தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாகவும் எந்த விதத்திலும் எவரும் இனவாதமாக செயற்படுவதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என்று அவர் தெரிவித்தார்.

நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் சமமாக மதிக்கப்படுபவர் என தெரிவித்த அமைச்சர், நாட்டின் அபிவிருத்தி உட்பட அனைத்து நடவடிக்கைகளுக்கும் அதுவே அவசியமாக உள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

## முட்புதருக்குள் வீசப்பட்ட ...

அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் வீட்டில் இருந்து சுமார் 150 மீற்றர் தொலைவில் உள்ள முட்புதரில் குழந்தை சுற்றப்பட்டிருந்த உரப்பை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பெற்றோருக்கு கிடைத்த முறைப்பாட்டின்படி விசாரணை அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளனர்.அதே பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குழந்தையை கடத்தியமைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என்பதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆனமடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வதேச ரீதியில் இலங்கை...

பிரதமர் தினேஸ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதே வேளை, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கான சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ள நிலையில் அது விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்த அவர், அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும் அது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஜெனிவாவில் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் பிரதமர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இலங்கை தொடர்பான ஜெனீவா தீர்மானம் தொடர்பில் முன்னாள் வெளி விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த பிரதமர்,

பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல். பீரிஸும் முன்னாள் வெளிவிவகார அமைச்சராக பணிபுரிந்துள்ள அதே வேளை நானும் அப்ப பதவியை வகித்துள்ளேன். அந்த வகையில் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் எமது நாடு முகம்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நாம் இருவருமே நன்கறிவோம். மனித உரிமைகள் விடயத்தில் நாம் பின்பற்றியுள்ள வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பிலும் அது தொடர்பான பிரச்சினைகள் தொடர்பிலும் பேராசிரியர் ஜீ .எல் . பீரிஸ் நன்கறிவார்.

இந்நிலையில் இம்முறை ஜெனிவா மனித உரிமை பேரவையில்20 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. தீர்மானத்திற்கு எதிராக 07 நாடுகளே வாக்களித்துள்ள நிலையில் இலங்கை தனிமைப்பட்டுள்ளதாக சிந்திப்பது தவறானது.

அனைத்து நாடுகளுடனும் சிறந்த நட்புறவை நாம் தொடர்ந்து பேணிப் பாதுகாப்போம்.

அந்த நட்புறவின் பிரதிபலன்களை நாட்டிற்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். எந்த நாடும் இலங்கைக்கு வழங்கும் எந்தவித உதவிகளையும் நிறுத்தவில்லை என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

## அத்தியாவசிய பொருட்களின்...

இதன்படி, 685 ரூபாயாக இருந்த ஒரு கிலோ கொண்டைக்கடலை, தற்போது 650 ரூபாவாகும்.

ஒரு கிலோகிராம் சிகப்பு பருப்பின் விலை 17 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 415 ரூபாயாக இருந்த ஒரு கிலோகிராம் பருப்பு தற்போது 398 ரூபாய்.

ஒரு கிலோகிராம் நாட்டு சம்பாவின் விலை 08 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

228 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் நாட்டு சம்பா 220 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

றக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் வெள்ளை நாட்டரிசியின் விலை 05 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 03 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி 278 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி 275 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

## தகவல்களை மிகத்...

ஜனாதிபதி முன்னறிவிப்பின்றி, திடீரென இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி மற்றும் கொள்கைத் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வது அமைச்சினூடகச் செயலாளர்களுக்கு இருக்கும் பிரதான பொறுப்பாகும். எனவே, அரச தகவல் தொடர்புப் பொறிமுறையை வலுவாகப் பேணுவதற்கு அரசாங்கத் தகவல் திணைக்களம், ஜனாதிபதி ஊடகப் பிரிவு மற்றும் அமைச்சுக்களுக்கிடையில் சிறந்த ஒருங்கிணைப்பு பேணப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து இச்செயலமர்வில் ஊடகச் செயலாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. நாம் வெளியிடும் கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அரசாங்கம் முன்னெடுக்கும் பணிகளை நாட்டுக்கு எடுத்துக் கூற வேண்டும். நாங்கள் மிகவும் கடினமான காலப்பகுதியில் இருக்கிறோம். 20ஆம் நூற்றாண்டிலோ அதற்கு முன்னரோ இப்படியொரு நிலைமையை நாடு எதிர்கொண்டதில்லை.

இதிலிருந்து நாம் வெளியேற வேண்டும். பெரும்பாலான மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அந்த நிலைமையை நாம் சீர்செய்ய வேண்டும்.

அரசின் வேலைத்திட்டம் என்ன என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றார்.

## கையிருப்பிலுள்ள பணம்...

தற்போது, வெளிநாட்டில் உள்ள தொழிலாளர்கள் நாட்டுக்கு அனுப்பும் டொலர்கள் உள்ளிட்ட அந்நிய செலாவணி வரவுகளில் முன்னேற்றம் உண்டு இதனால், அந்நிய செலாவணி பணப்புழக்கம் நேர்மறையான நிலையை எட்டியுள்ளது.

இந்த மாத இறுதியில் தற்போதைய நாட்டின் பணவீக்கம் குறைவடையும் சாத்தியம் இருப்பதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் கூறினார். இதன்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

உள்நாட்டு கடன் உரிமையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களிலும் முன்னேற்றம் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை முன்வைத்துள்ள யோசனையில் நாட்டின் பொருளாதார முறைகேடு குறித்து வெளியிட்டுள்ள கருத்தை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் செயற்பாடுகளுக்கு தாக்கம் ஏற்படலாம் என்பது பற்றிய விடயம் இதுவரை வெளிப்படவில்லை எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இறுக்கமான நாணயக் கொள்கையைப் பின்பற்றுவதன் விளைவாக எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் பணவீக்கத்தை எதிர்பார்த்திருக்கும் மட்டத்திற்குக் குறைத்துக்கொள்ள முடியும்.

பொருளாதார நெருக்கடியை உரியவாறு கையாள்வதை முன்னிறுத்தியும், விரைவான பொருளாதார மீட்சியை இலக்காகக் கொண்டும் நாணயச் சபை பல்வேறு தீர்மானங்களை மேற்கொண்டிருக்கின்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டுப் பொருளாதார செயற்பாடுகளைப் பொறுத்த மட்டில், பொருளாதாரம் முதல் அரையாண்டில் 8 சதவீதத்தைப் பதிவு செய்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க , இரண்டாம் அரையாண்டிலும் இது தொடரும் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

## திக்கம் வடிசாலையை...

கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரனவிற்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில்;

யாழ். மாவட்டத்தின் மரபு சார்ந்த கைத்தொழில் நிலையங்களில் ஒன்றான திக்கம் வடிசாலையை தனியார் நிறுவனத்திற்கு வழங்கும் செயற்பாட்டினை முற்றாகக் கண்டிக்கிறேன்.

திக்கம் வடிசாலையை முறையற்ற விதத்தில் தனியார் முதலீட்டாளருக்கு கையளிப்பதன் மூலம் வடிசாலையை அபிவிருத்தி செய்ய பனை அபிவிருத்திச் சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டு அதற்குரிய பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் தங்களின் கவனத்திற்கு பல தடவை கொண்டு வரப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவரால் இதற்கான பணிகள் முழுவீச்சுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் திக்கம் வடிசாலை நிர்வாகத்தினர் இதற்கான எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

கேள்வி கோரலில் விதிமுறைகள் மீறப்பட்டு குறித்த ஓர் தனியார் நிறுவனத்திற்கு வடிசாலையை ஒப்படைத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முறையற்ற கேள்வி கோரல் ஊடாக வடிசாலையை தனியாருக்கு தாரைவார்க்க பனை அபிவிருத்திச் சபை தலைவர் தீர்மானித்துள்ளமை முறையற்ற செயற்பாடு.

மக்களின் வரிப்பணத்தில் அரசாங்கத்தால் நிறுவப்பட்ட நிறுவனத்தை தனியாரிடம் ஒப்படைப்பது பாரிய மோசடிச் செயற்பாடு என்று குறிப்பிட்டுள்ளார்.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு...

செயற்பாட்டாளர் எஸ்.டி.கணேசலிங்கம், சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பின் செயற்பாட்டாளர் இராஜேந்திரன், தோட்ட தொழிலாளர் மத்திய நிலையத்தின் அமைப்பாளர் டீ.மாக்ஸ் பிரபாகரர், ப்ரொடெக்ட் சங்கத்தின் உப தலைவி கருப்பையா மைதிலி, தோட்ட தொழிலாளர் மத்திய நிலையத்தின் செயலாளர் வசந்தகுமார அபேகோன் ஆகிய பிரதிநிதிகள் கலந்துகொண்டு கருத்துகளை முன்வைத்தனர்.

## வீடொன்றிலிருந்து...

சந்தேக நபர் அம்பலாந்தோட்டை பாலத்துக்கருகில் (06) கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 40 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். அம்பலாந்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த 19 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

## சிறுமி துஷ்பிரயோகம்;... 03ஆம் பக்கத் தொடர்

இந்த நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார் வயோதிபரை வியாழக்கிழமை கைது செய்தனர்.அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமியிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

## ஜனாதிபதியின் உரையில்... 03ஆம் பக்கத் தொடர்

முன்னேற்றம் தொடர்பில் வெளிப்படுத்தாமல் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி கோருகின்றார்.

அது தொடர்பான தகவல் தெரியாமல் எமக்கு ஜனாதிபதியின் அழைப்பு தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள முடியாது. அத்துடன் நாட்டைக் கட்டியெழுப்ப மேற்கொள்ளவேண்டிய பல விடயங்களை ஜனாதிபதி தனது உரையில் தவறவிட்டுள்ளார். அதனால்தான் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான முக்கியமான 20 விடயங்களை நாம் முன் வைக்கின்றோம்.

அரசாங்கமானது வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மக்கள் மீது வரி சுமத்தி கட்டியெழுப்ப முயற்சிக்கின்றது.

வங்குரோத்து அடைந்திருக்கும் நாட்டை கட்டியெழுப்ப இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது இயல்பான விடயம் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமக்கும் சாணக்கியனுக்கும்... 03ஆம் பக்கத் தொடர்

இலக்கத் தகடை கொண்ட வாகனமே வந்திருந்தது. புலனாய்வு உறுப்பினர் ஒருவர் எங்களை பின் தொடர்ந்ததாக கறுவாத்தோட்டம் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்திருந்தார்.

என்னுடையதும் இராசமாணிக்கம் சாணக்கியன் எம்.பியினதும் சிறப்புரிமை விடயமே இது. நாங்கள் பாராளுமன்றம் வருவதும் செல்வதும் பாராளுமன்ற சிறப்புரிமைக்கு உட்பட்டதே.சபாநாயகர் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இது எங்களின் உயிருக்கான அச்சுறுத்தல் என்பதுடன் எங்களின் சிறப்புரிமை மீறலுமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புனர்வாழ்வு சட்டத்தை... 03ஆம் பக்கத் தொடர்

இம்முறை நடுநிலை வகித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஜெனிவா மனித உரிமை பேரவையில் எமது நாட்டுக்கு எதிரான பிரேரணையில் இலங்கைக்கு ஏற்பட்டது அவமான தோல்வியாகும். இதற்கு முன்னர் எமக்கு எதிரான பிரேரணையில் 11 நாடுகள் எமக்கு ஆதரவாக வாக்களித்திருந்தன. எனினும் இம்முறை அது ஏழாக குறைவடைந்துள்ளது. அதேபோன்று வாக்களிப்பில் கடந்த முறை 24 நாடுகள் நடுநிலையாக இருந்தபோதும் இம்முறை அது 20 நாடாக குறைவடைந்துள்ளது.

அதேபோன்று இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியத்தின் மூலம் எமக்கு சாதகமான பதில் கிடைக்கும் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருந்தது அவ்வாறான எந்த சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. சீனா எமக்கு ஆதரவளிக்கும் என்பது நாம் ஏற்கனவே அறிந்த விடயம்.

மேலும் ஜெனிவாவில் எமக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணையில் பொருளாதார மோசடிக் குற்றச்சாட்டுகள் முதல் தடவையாக கொண்டுவரப்பட்டதாகும்.

எமது நடவடிக்கைகள் காரணமாகவே நாம் தேவையில்லாத பிரச்சினைகளுக்குள் சிக்கியுள்ளோம். புனர்வாழ்வு சட்ட மூலம் பயங்கரவாத தடைச்சட்டம், இனவாத செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் எமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களாகும். புனர்வாழ்வு சட்டமூலம் பயங்கரவாத தடைச்சட்டம் ஆகியன உயர் நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. அதனால் இந்த விடயங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றார்.

## புனர்வாழ்வு சட்டத்தை... 03ஆம் பக்கத் தொடர்

பதவியொன்றில் காணப்படும் வெற்றிடத்துக்கு ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மாஅதிபர் பி.ஜே.கே.எஸ். டபிள்யூ. விக்கிரமசிங்கவை நியமிப்பதற்குப் பாராளுமன்றப் பேரவையினால் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் நடைபெற்ற பாராளுமன்றப் பேரவைக் கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## திடீரென அதிகரித்த...

அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை குடிவரவுத் திணைக்களம் தற்போது மாதமொன்றுக்கு சராசரியாக 78,000 கடவுச்சீட்டுகளை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.அதன்படி, இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூலை வரை வழங்கப்பட்ட கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை 5,90,260 ஆகும்.

## தனிப்பட்ட அரசியலை...

போதும் அனைத்து அரசாங்கங்களும் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றே வந்துள்ளன

என்பதை சுட்டிக் காட்டிய அமைச்சர், அதுவே இப்போதைக்கு பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய விசேட உரை மீதான நேற்றைய இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்: அரசியல் நோக்கங்களுக்காக சபையில் ஆத்திரமூட்டும் உரைகளை ஆற்ற முடியும். எனினும் உண்மை நிலையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட அரசியலை விடுத்து உலக நிலைமையை கவனத்திற்கொண்டு கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்றை இணைந்து மேற்கொள்ளவேண்டும். அந்த வகையில் முதலில் பாரதூரமான நெருக்கடி நிலையை பாராளுமன்றம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

## தனுஷ்கோடி மணல்திட்டில்...

ராமேசுவரத்தை அடுத்த தனுஷ்கோடி அருகில் உள்ள 5வது மணல் திட்டியில் ஒரே குடும்பத்தை சேர்ந்த அகதிகள் தங்களது 3 குழந்தைகளுடன் நேற்று தவித்துக் கொண்டிருந்தனர். இதனை கண்ட மீனவர்கள் மண்டபம் கடலோர காவல் படை பொலிசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற கடலோர காவல் படையினர் 5 பேரையும் மீட்டு அவர்களிடம் விசாரணை நடத்தினர். அப்போது அவர்கள் கடந்த 5ந் தேதி தனுஷ்கோடி அருகில் உள்ள 5வது மணல் திட்டையில் இறக்கிவிடப்பட்டோம் என்றும், படகில் வந்தபோது தங்களுடன் வந்த ஒருவர் கடலில் குதித்து விட்டதாகவும் தெரிவித்தனர்.

மேலும், படகில் வந்தபோது இலங்கை கடற்படையினர் தங்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டதாகவும் அவர்களிடம் இருந்து தப்பி இங்கு வந்து சேர்ந்ததாகவும் தெரிவித்தனர்.இலங்கை தலைமன்னார் மாவட்டம் தாழ்வுபாடியைச் சேர்ந்த சபரி (வயது 33)அவரது மனைவி ரதிகா (31) மகன் சதீஷ்(7) மகள் சல்மா(4) அகின் (6 மாத குழந்தை) என்பது தெரியவந்தது.

## ஓடும் ரயிலில் துணிகரமாக...

இடம்பெற்றுள்ளது.வாள் உட்பட கூரிய ஆயுதங்களுடன் ரயிலுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் இருவரும் ஓடும் ரயிலிலிருந்து குதித்து தப்பியோடிய போது, ஒருவரை காயங்களுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 05.30 மணியளவில் அங்குலான ரயில் நிலையத்தை கொழும்பு – மாத்தறை ரயில் அண்மித்துள்ளது. இதன்போது கொள்ளையர்கள் இருவரும் ரயிலில் ஏறியுள்ளனர்.கொள்ளையர்கள் குறித்த ஒரு ரயில் பெட்டியில் அமர்ந்திருந்த கணவன் மற்றும் மனைவியை அச்சுறுத்தி பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை கொள்ளையிட்டுள்ளனர்.

பின்னர் கணவனின் பணப் பையை பெறுவதற்கு கொள்ளையர்கள் முயன்றுள்ளனர்.அதற்கு கணவன் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியபோது அவரை கொள்ளையர்கள் வாளால் வெட்டியுள்ளனர்.இதன்போது மனைவியையும் அவர்கள் தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து கணவனின் பணப் பையை கொள்ளையர்கள் கொள்ளையிட்டுள்ளனர்.பின்னர் ரயிலிருந்த ஏனைய பயணிகள் குறித்த பெட்டிக்குச் சென்றபோது கொள்ளையர்கள் இருவரும் ஓடும் ரயிலிலிருந்து குதித்துள்ளனர்.

இதனையடுத்து உடனடியாக 119 அவசர அழைப்பு இலக்கத்துக்கு தகவல் பரிமாற்றப்பட்டுள்ளது.

மொறட்டுவை பொலிஸார் கொள்ளையர்கள் குதித்த இடத்துக்கு விரைந்துள்ளனர். இதன்போது ரயிலிருந்து குதித்ததால் ஏற்பட்ட காயம் காரணமாக கொள்ளையர்களில் ஒருவர் வீழ்ந்து கிடந்துள்ளார்.அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மற்றைய சந்தேக நபர் தங்கச் சங்கிலி,2 இலட்சம் ரூபா பணப் பையுடன் தப்பிச் சென்றுள்ளனர். மொரட்டுவ பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக மன்னாரிலிருந்து மொரட்டுவை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தம்பதியினரே இச்சம்பவத்துக்கு முகம் கொடுத்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த தம்பதியினர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்து சந்தேக நபரான கொள்ளையருக்கும் பொலிஸ் காவலில் சிகிச்சையளிக்கப்பட்டு வரும் நிலையில் அவர் போதைப் பொருளுக்கு அடிமையான பல குற்றச் செயல்களுக்காக விளக்கமறியலில் இருந்து விடுதலை பெற்றவர் என தெரியவந்துள்ளது.மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கை திட்டவட்டமாக...

பாகிஸ்தான், பிரேசில், சீனா, வெனிசுலா, ஜப்பான் மற்றும் கொரியக் குடியரசு ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் வாக்கெடுப்புக்கு முன்னதாக இலங்கைக்கு ஆதரவாக அறிக்கைகளை வெளியிட்டனர்.

இந்தத் தீர்மானமானது அனுசரணையாளர்களின் அரசியல் கருத்துக்களை முன்வைக்கும் நோக்கத்தை பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தாலும், அது இலங்கைக்கு வெளிப்படையாக உதவாதென அமைச்சர் சப்ரி சுட்டிக்காட்டினார்.

மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் உருவாக்கப்பட்ட 'வெளிப்புற ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை' 'நீட்டிக்கவும் வலுப்படுத்தவும்' முயலுகின்ற குறிப்பாக செயற்பாட்டுப் பந்தி 08 இலுள்ள பிரேரணையை அமைச்சர் கடுமையாக எதிர்த்தார். இந்தப் பொறிமுறையானது சபையின் எதிர்பார்க்கப்பட்ட ஆணைக்கு வெளியே உள்ளது. எந்தவொரு இறையாண்மையுள்ள அரசும் அதன் அரசியலமைப்புக்கு முரணாக இயங்கும் மற்றும் அதன் உள்நாட்டு சட்ட செயன்முறைகளின் அர்ப்பணிப்பை முன்கூட்டியே தீர்மானிக்கும் ஒரு வெளிப்புறப் பொறிமுறையின் மேலெழுதலை ஏற்க முடியாது.

இந்தத் தீர்மானத்தின் வரவு செலவுத் திட்டத் தாக்கங்கள் குறித்து பல நாடுகள் ஏற்கனவே தீவிர கவலைகளை எழுப்பியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். உலகளாவிய நெருக்கடிகளுக்கு மத்தியில் நன்கொடையாளர்கள் உட்பட அனைத்து உறுப்பு நாடுகளின் வளங்களில் இது உதவாத மற்றும் தவறான விளைச்சலாகும் என அவர் மேலும் குறிப்பிட்டார். இதற்கு நேர்மாறாக, பசி மற்றும் குழந்தை ஊட்டச்சத்துக் குறைபாட்டைத் தடுப்பதற்காக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கடுமையான நிதித் தேவைகளை நாங்கள் எதிர்கொள்கிறோமென அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டுப் பொருளாதாரம் மற்றும் நிதிக் கொள்கை போன்ற சபையின் கட்டமைப்புக்கு வெளியே உள்ள விடயங்கள் இத் தீர்மானத்திலுள்ள குறிப்புக்களுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி எதிர்ப்புத் தெரிவித்தார். இன்று பல நாடுகள் எதிர்கொள்ளும் பொருளாதார மற்றும் நிதி நெருக்கடிகளுக்கான தீர்வுகள் சபையின் ஆணை, கருவிகள் அல்லது நிபுணத்துவம் ஆகியவற்றில் காணப்படாதென அவர் மேலும் குறிப்பிட்டார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# கிழக்கின் குரல்



# காணாமல் போன கல்முனை மீனவர்கள் வடமாகாண கடலில்;

## வடமாகாண மீனவர்களை உதவிக்கு அழைக்கிறோம்




அம்பாறை மீனவ சங்கம்

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

காணாமல் போன கல்முனை மீனவர்கள் வடமாகாண கடலில் இருக்கலாம் என சந்தேகிப்பதால், வடமாகாண மீனவ சங்கங்களும், மீனவர்களும் இவர்களை கண்டுபிடிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம் என இயந்திரப்படகு உரிமையாளர்கள், மீனவர்கள் கூட்டுறவு சங்க தலைவர் எம்.எஸ்.ஏ. நஸீர் தெரிவித்தார்.

கல்முனை கடலிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் 12 நாட்களாகியும் கரை திரும்பவில்லை. இது தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பொன்று கல்முனை மீனவ சங்க கட்டடத்தில் வரையறுக்கப்பட்ட அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீன்பிடி இயந்திரப்படகு உரிமையாளர்கள், மீனவர்கள் கூட்டுறவு சங்க ஏற்பாட்டில் வியாழக்கிழமை (06) மாலை இடம்பெற்றது.

கல்முனை எல்லைக்குட்பட்ட கடற்பரப்பிலிருந்து கடந்த 26.09.2022ம் திகதியன்று மாலை ஏ.எல்.எம். உவைஸ் என்பவருக்கு சொந்தமான படகில் மீன்பிடிக்க புறப்பட்டு சென்ற மீனவர்களான கல்முனையைச் சேர்ந்த எம்.ஐ.எம் மஜிட் (வயது 55), சி.எஸ்.எச்.எம் நிப்றாஸ் (வயது 36 ), ஏ.பி. கபீர் (வயது 50), எம்.என்.ஹில்மி (வயது 33) ஆகிய மீனவர்கள் காணாமல் போகியுள்ளனர்.

இவர்கள் காணாமல் போன தினத்திலிருந்து மீனவ சங்கங்கள், கடற்படை, அனர்த்த முகாமைத்துவ நிலையம், மீன்பிடி அமைச்சு என்பன இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 12 தினங்களாக கடலுக்குச் சென்ற மீனவர்கள் இதுவரை கரைக்குத் திரும்பவில்லை என்பதுடன் அம்மீனவர்களை கடந்த 28ம் திகதி மாலை 05 மணியளவில் வாழைச்சேனை பிரதேச கடலில் வைத்து மீன்பிடி படகொன்று கண்டுள்ளது. அவர்களின் பயணப்பாதையை நோக்கும் போது வடமாகாண கடலில் அந்த மீனவர்கள் தத்தளிக்கும் வாய்ப்பு இருப்பதாக சந்தேகிக்கிறோம். எங்களின் குடும்பங்கள் வாழ்வாதாரமின்றி தமது வாழ்க்கையைக் கொண்டு செல்ல பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். 4 மீனவர்கள் குறித்து இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இந்த விடயத்தை சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறிகின்றோம்.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் இது பற்றி கூறுகையில்,

அவர்களின் தொலைபேசி செயற்பாட்டில் உள்ளது. ஆனால் அவர்களுடன் பேச முடியாதுள்ளது. அவர்களை பாதுகாப்பாக மீட்க சகல வழிகளிலும் போராடிக் கொண்டிருக்கிறோம். இறைவனின் உதவியுடன் அவர்களை மீட்போம் என நம்பிக்கை வெளியிட்டார்.

# அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துள்ள காட்டு யானைகளின் தொல்லை;

## மாவட்ட அரசாங்க அதிபரிடம் பொது மக்கள் கோரிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்து காணப்படும் காட்டு யானைகளின் தொல்லைகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மைக் காலமாக மாவட்டத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதால் இரவு வேளைகளில் பொது மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், குடியிருப்பு பிரதேசங்களுக்கு யானைகள் கூட்டம் கூட்டமாக சென்று பாரிய சேதங்களை ஏற்படுத்தி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள பிரதேசங்களில் பகல் வேளைகளில் யானைகள் கூட்டம் கூட்டமாக வருவதால் பல்கலைக்கழக மாணவர்களும், ஊழியர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதோடு, மாலை வேளையில் அப் பிரதேசங்களில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.

இரவு வேளையில் மின்சாரம் தடைப்படுவதால் பொது மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருவதோடு வீதிகளில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் பீதியின் காரணமாக மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி பாதுகாப்பை தேடி தங்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோர் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிராமங்களுக்குள் உட்புகும் யானைகள் கூட்டம் வீட்டுத் தோட்டங்களையும், சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைத் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# மட்டக்களப்பு மாநகர சபையின் 65ஆவது சபை அமர்வு



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாநகர சபையின் 65ஆவது சபை அமர்வு நேற்று முன்தினம் மாநகர முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்வமர்வில் மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர பிரதி ஆணையாளர், பொறியியலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

வழமையான சபை சம்பிரதாயங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமர்வில் நிலையியற் குழுக்களின் சிபாரிசுகள், முதல்வரின் முன்மொழிவுகள், உறுப்பினர்களின் முன்மொழிவுகள் போன்றன இடம்பெற்றன.

இதில் விசேடமாக பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், 2021 மற்றும் 2022ம் ஆண்டுகளுக்கான பாதீட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொது இடங்களில் பாதுகாப்பற்ற முறையில் கொட்டப்படும் கழிவுகளினால் சுகாதாரச் சீர்கேடு

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**



அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் தினசரி பாதுகாப்பற்ற முறையில் கொட்டப்படும் அதிகரித்த குப்பை கூளங்களினால் பல்வேறு பிரதேசங்களில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகவும், இம்முறைகேட்டை தடுத்து நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் எனவும் கோரப்படுகின்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அட்டாளைச்சேனை – ஆலம்குளம் பிரதான போக்குவரத்து மார்க்கமான சம்புக்களப்பு வீதியில் பாதுகாப்பற்ற முறையில் கொட்டப்பட்டுள்ள கழிவுகள் தொடர்பில் அவசர நடவடிக்கைமேற்கொள்ள வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது போக்குவரத்துப் பாதைகள், பொதுமக்கள் செறிந்துவாழும் குடியிருப்புப் பிரதேசங்கள், பொது இடங்கள், சந்தைகள், ஆறுகள், குளங்கள், இயற்கை நீர்நிலைகள், விளையாட்டு மைதானங்கள், நெற்காணிப் பிரதேசங்கள், வெற்றுக் காணிகள், கடற்கரைப் பிரதேசம் என்பன தினசரி கொட்டப்படும் குப்பை கூளங்களினால் பெருமளவில் அசுத்தமாக்கப்பட்டு வருகின்றன.

# கஞ்சிகுடிச்சாறு பயணிகள் பஸ் தரிப்பிடமிற்றி அவதி

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

பொத்துவில் தேர்தல் தொகுதிக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மற்றும் தாண்டியடி பிரதேசங்களில் பிரயாணிகள் இளைப்பாறுவதற்கு பஸ் தரிப்பு நிலையமொன்று இன்மையால் பஸ் பிரயாணிகள் பலவிதமான இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். விவசாயத்திலும் கூலித் தொழிலிலும் ஈடுபடும் இப்பிரதேச மக்கள் பஸ்ஸிற்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

வயோதிபர்களும் சிறுவர்களும் கர்ப்பிணி தாய்மாரும் பெண்களும் கால் கடுக்க நீண்ட நேரம் கோடை காலத்தில் கொழுத்தும் வெயிலிலும் மாரி காலத்தில் கொட்டும் மழையிலும் பஸ்ஸிற்காக காத்திருக்க வேண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு பிரதேசவாசிகள் கேட்கின்றனர்.

# சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 5ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு





கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 5 ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு நிறுவக வளாகத்தில் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி. புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் நடைபெற்றது.

இவ் ஆய்வு மாநாட்டில் தமிழகப் பேராசிரியர்களான அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ரி.அருட்செல்வி, பாண்டிச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவகத்தின் மானிடவியல் துறையின் ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி. எஸ் பக்தவக்சல பாரதி ஆதார சுருதி உரைகளை (Key Note Address) நிகழ்த்தினர்.

இவ் ஆய்வு மாநாட்டுக்கு பிரதம விருந்தினராக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை சிரேஷ்ட பேராசிரியரும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் பேரவை உறுப்பினருமான பேராசிரியர் பிறேமகுமார டி சில்வா, கௌரவ விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வருடம் (2022) “மாறிவரும் உலகின் தொழில்நுட்ப சவால்களை எதிர்கொள்ளலும் இனக்குழு சமூகத்தின் கலை பண்பாட்டுப் பெறுமானங்களை அடையாளப்படுத்தலும்” என்பதை மையப்பொருளாகக் கொண்டு ஆய்வு மாநாடு நடைபெற்றது.

ஆய்வு மாநாட்டில் உள்நாட்டு ஆய்வாளர்களின் 24 ஆய்வுகளும் மூன்று வெளிநாட்டு ஆய்வாளர்களின் ஆய்வுக்கட்டுரைகளும் முன்வைக்கப்பட்டன. இசை, நடனம், நாடகம், இலக்கியம், பண்பாடு, சமூக விஞ்ஞானத்துறை சார்ந்த ஆய்வுகள் பலவும், பண்பாட்டு வெளியில் இசை, அரங்கும் சமூகமும், கட்புலமும் பண்பாடும், சதிராட்டமும் பன்முகத் தோற்றமும், இலக்கியமும் பண்பாட்டு மரபுகளும், வாழ்வியலில் தொழில்நுட்பம் என்ற பொருண்மைகளில் ஆறு அமர்வுகளாக நடைபெற்றன.

# ஊடக ஒழுக்க திறன்விருத்தி பயிற்சி செயலமர்வு



**மட்டக்களப்பு விஷேட நிருபர்**

ஊடக ஒழுக்கத்தினூடாக வன்முறைகள் மற்றும் தீவிரவாதத்தைத் தடுப்பதற்கான ஊடகவியலாளர்களுக்கான திறன் விருத்தி பயிற்சி செயலமர்விற்கான முன்னோடி கலந்துரையாடல் நேற்று (07) மட்டக்களப்பு கல்லடி LIFT நிறுவன ஆலுவலகத்தில் நடைபெற்றது.

LIFT நிறுவனம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஊடகப்பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் ஊடகவியலாளர் கலாபூசணம் இரா தவராஜா எழுதி வெளியிட்ட 'மட்டுநகரின் இன்னுமொரு பக்கம்' நூலினை மாவட்ட ஊடகப் பிரிவின் அதிகாரி வடிவேல் ஜீவானந்தம் மற்றும் LIFT நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜானு முரளிதரன் ஆகியோருக்கு வழங்குவதைக் காணலாம்.

# மரத்தில் இருந்து விழுந்தவர் மரணம்; மகிழுர் பிரதேசத்தில் சம்பவம்

**மண்டூர் தினகரன் நிருபர்**

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மகிழுர் பிரதேசத்தில் மரத்தில் ஏறியவர் தவறுதலாக விழுந்ததில் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் (06) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பழைய துறையடி வீதி குருமன்வெளி பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அமரசிங்கம் ரவீந்திரன் என்பவரே மரணமடைந்தவராவார். தனது வீட்டிலிருந்து தனது தாயாரின் வீடான மகிழுர் பிரதேசத்திற்கு சென்று வீட்டு வளாகத்தில் உள்ள மாமரத்தில் ஏறியவர் தவறுதலாக கீழே விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் (06) உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# மீன்பிடி உபகரணங்களின் விலை உயர்வு; பதியப்படாத படகுகளை பதிவுசெய்ய சந்தர்ப்பம்

**(தலைமன்னார் விஷேட நிருபர்)**



மீன்பிடி கலங்களின் விலை தற்பொழுது அதிகரித்துள்ளமையை கருத்திற்கொண்டு மீனவர்களுக்கான மாற்று ஏற்பாடு ஒன்றை கடற்தொழில் தலைமை காரியாலயம் ஏற்பாடு செய்துள்ளதாக உதவி பணிப்பாளர் சரத் சந்திரநாயக்க மன்னார் மீனவர்களுக்கு அறிவித்துள்ளார்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள மன்னார் மாவட்ட அலுவலகத்தில் பணிபுரியும் வெளிக்கள அலுவலர்களுக்கான கூட்டமொன்று நேற்று முன்தினம் உதவிப் பணிப்பாளர் சரத் சந்திரநாயக்கவின் தலைமையில் இடம்பெற்றது.

இதில் மாவட்டத்தின் கடல்சார் உதவி பொறியியலாளர் வி.சிறீதரன் உட்பட மாவட்டத்தின் 06 கடற்றொழில் பிரிவுகளுக்கு பொறுப்பான கடற்றொழில் பரிசோதர்களும் கலந்து கொண்டனர்.

இதில் முக்கியமாக தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மீனவர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ளத் தேவையான கண்ணாடி படகுகளின் விலைகள் பாரதூரமாக அதிகரித்துள்ளமையால் அதனைக் கொள்வனவு செய்வதில் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

சாதரணமாக ரூபாய் ஒன்றரை தொடக்கம் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு விற்பனையான படகுகள் தற்போது ஆறு தொடக்கம் ஏழு இலட்சம் வரை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே விலை அதிகரிப்பை கருத்திற் கொண்டு மீனவர்களுக்கான மாற்று ஏற்பாடு ஒன்றை தலைமை காரியாலயம் ஏற்பாடு செய்துள்ளதாக உதவி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அதன்படி இவ்வளவு காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பழைய படகுகளின் பதிவு நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க அனுமதி கிடைத்துள்ளதாகவும் இதன்மூலம் வசதியற்ற மீனவர்கள் நல்ல நிலையில் உள்ள படகுகளை குறைந்த விலையில் கொள்வனவு செய்து தங்கள் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள ஏராளமான பதியப்படாத படகுகளை பதிவு செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் இதற்காக மீனவர்கள் தங்கள் படகுகள் கடலோட தகுதியானது என உறுதிப்படுத்த கடல்சார் உதவி பொறியியலாளரின் கடற்பகுதி சான்றிதழை பெற்று கடற்றொழில் பரிசோதகரிடம் சமர்ப்பித்து தங்கள் படகுகளை பதிவு செய்து கொள்ளலாம் என உதவி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் மாவட்டத்தின் இறங்குதுறையில் தொழிலுக்கு இடையூறாக கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கும் படகுகளை பிரயோசனப்படுத்தக்கூடியதாகவிருக்கும் என்பதனையும் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

## இரத்ததான முகாம்

**யாழ். விசேட நிருபர்**

148ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்.பிரதான அஞ்சலகத்தால் வருடாவருடம் முன்னெடுக்கப்படும் இரத்ததான முகாம் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட பிரதான அஞ்சலுவலகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்பொழுது அதிகளவான அஞ்சலலுவக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தன்னார்வரீதியாக இரத்ததான முகாமில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதி அஞ்லதிபதி நாயகம் மதுமதி வசந்தகுமார், யாழ்ப்பாணம் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அனுராத பெர்ணாண்டோ,யாழ்.பிரதம அஞ்சல் அதிபர் இ.மணிவண்ணன், தபாலதிபர்கள், வடமாகாண சுங்க திணைக்கள அதிகாரிகள், அஞ்சலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிற மாகாணங்களில் பணியாற்றும் வடக்கு சுகாதார சேவையாளர்களுக்கு இடமாற்றம்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

வடக்கு மாகாணத்திற்கு வெளியே பணியாற்றும் வடக்கு சுகாதார சேவையாளர்களை தொடர்பு கொள்ளுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் திலிப் லியனகே தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல சுகாதார சேவையாளர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் முதல் நியமனங்களை பெற்று பணியாற்றி வருகின்றனர். அவர்கள் வட மாகாணத்திற்கு இடமாற்றம் பெற்று பணியாற்ற விரும்புவதாக அவர்களது பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். எனவே அவ்வாறு பணியாற்றுகின்றவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் திலிப் லியனகே தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிற மாகாணங்களில் தற்போது முதல் நியமனம் பெற்று கடமையாற்றும் வடக்கு மாகாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட சுகாதார சேவையாளர்கள் இங்கு சேவையாற்ற விரும்பும் பட்சத்தில் தமது முழுப்பெயர், தற்போது கடமையாற்றும் சேவை நிலையம், அது அமைந்துள்ள மாவட்டம் மற்றும் தொடர்பு இலக்கம் ஆகிய விபரங்களை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அல்லது 0777842861என்ற வாட்ஸ் அப் செயலி ஊடாகவும் அனுப்பி வைக்குமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## அல்லாரை மாதா பேராலயத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

கொடிகாமம் அல்லாரை புனித செபமாலை மாதா பேராலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது. மரியன்னை தேவாலயத்தின் வருடாந்த பெருவிழா இடம்பெற்றபோதே புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. ஆலய பங்குத்தந்தை தலைமையில் இடம்பெற்றநிகழ்வில் யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார். 98 ஆண்டுகள் பழமையான செபமாலை அன்னை ஆலயம் நூற்றாண்டை முன்னிட்டு புதிய பேராலயமாக நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆலயத்தின் வருடாந்த திருவிழாவான வெள்ளிக்கிழமை காலை திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதோடு செபமாலை அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெற்றது.







புனித செபமாலை மரியன்னையின் பெருவிழாவை முன்னிட்டு பேசாலை பங்கில் வெற்றி அன்னை நூறு வீட்டுத்திட்டத்திலுள்ள அன்னையின் சிற்றாலயத்தில் கடந்த இரு தினங்களாக நவநாளும் திவ்விய நற்கருணை ஆராதனை இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து நேற்று வெள்ளிக்கிழமை (07) காலை பேசாலை பங்கு தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளாரின் ஏற்பாட்டில் சிறுத்தோப்பு பங்கு தந்தை அருட்பணி சீமான் மரியதாசன் அடிகளாரின் தலைமையில் பேசாலை பங்கு தந்தை மற்றும் உதவி பங்குத் தந்தை டிசாந்தன் அடிகளார் இணைந்து திருவிழா கூட்டுத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர். திருப்பலியைத் தொடர்ந்து கிராமத்துக்குள் அன்னையின் திருச்சூருபம் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு ஈற்றில் அருட்பணி சீமான் மரியதாசன் அடிகளாரால் பக்தர்களுக்கு திருச்சூருப ஆசீரும் வழங்கப்பட்டது.

(படம் தலைமன்னார் விஷேட நிருபர்)

## வேலணை பிரதேச முன்பள்ளி சிறுவர், ஆசிரியர்கள் கௌரவிப்பு



**கரவெட்டி தினகரன், வேலணை குறூப் நிருபர்கள்**

உலக சிறுவர் தினம் மற்றும் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நேற்றையதினம் வேலணை பிரதேசசபை முன்பள்ளியால் முன்பள்ளிச் சிறுவர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

வேலணை பிரதேச சபையின் தேவ திறந்தவெளி அரங்கில் பிரதேச சபையின் வேலணை உப அலுவலக பொறுப்பதிகாரி யசிந்தன் தலைமையில் நேற்றுமுன்தினம் (06.10.2022) காலை வெகுசிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக சபையின் தவிசாளர் நமசிவாயம் கருணாகரமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக முன்பிள்ளைப்பிராய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சயானி பாலமுரளியும், கௌரவ விருந்தினராக வேலணை பிரதேச சபையின் செயலாளர் தியாகச்சந்திரனும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்ததுடன் முன்பள்ளி ஆசிரியர்களையும் முன்பள்ளிச் சிறார்களையும் கௌரவித்து சிறப்பு பரிசில்களையும் நினைவு சின்னங்களையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கௌரவமான அரசியல் தீர்வு கோரி மல்லாகம் நீதவான் நலன்புரி நிலையத்தில் போராட்டம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சிறுபான்மையின மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு கோரியும் மல்லாகம் நீதவான் நலன்புரி நிலைய மக்களை மீள சொந்த இடத்தில் குடியமர்த்தக் கோரியும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மல்லாகம் நீதவான் நலன்புரி நிலையத்தில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில் கௌரவமான அரசியல் தீர்வு கோரி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற 100 நாட்கள் போராட்டத்தின் 67ஆம் நாள் நிகழ்வு நலன்புரி நிலையத்தில் மக்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.



போராட்டத்தில் கலந்து கொண்ட நலன்புரி நிலைய மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்;

நாம் 32 வருடங்களாக நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வருகிறோம்.பெரும் கஷ்டத்தின் மத்தியிலேயே இங்கு வாழ்ந்து வருகிறோம்.எமது பூர்வீக இடமான காளான் காட்டுப் பகுதியை அரசாங்கம் விடுவிக்கும் பட்சத்தில் நாம் அங்கு விவசாயம், கடற்றொழில் போன்ற தொழில்களில் ஈடுபட முடியுமென சுட்டிக்காட்டியிருந்தனர்.








பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 36 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் நான்காவது அமர்வு யாழ். பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். இன்றைய அமர்வில், துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பதிவாளர் வி.காண்டீபன், நிதியாளர் கே. சுரேஸ்குமார், பதில் நூலகர் எஸ்.கேதீஸ்வரன் மற்றும் பேரவை உறுப்பினர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், விருந்தினர்கள், பட்டம் பெறும் மாணவர்களின் சார்பில் அழைக்கப்பட்ட பெற்றோர் விருந்தினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






# பெருந்தோட்டப் பகுதிகளில் 40 வீதமானோர் பட்டினியை எதிர்கொண்டுள்ளனர்

## மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பி.பி.சிவப்பிரகாசம்

ஹற்றன் சுழற்சி நிருபர்)



மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் 40 வீதமானோர் பட்டினியை எதிர்கொண்டுள்ளனர் எனவும், அவர்களுக்கான உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாகவும் மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் பணிப்பாளரும், உலக தொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளருமான கலாநிதி சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

மனித அபிவிருத்தி தாபனத்தின் போஷாக்கு திட்டம் பற்றிய தெளிவூட்டல் நிகழ்வு நேற்றைய தினம் (07.10.2022) கொட்டகலை பகுதியில் இடம்பெற்றது.

மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பி.பி.சிவப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் விதுர சம்பத் கலந்து கொண்டதோடு, பிரதேச கிராம சேவகர்கள், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் அதிகாரிகள், பிரதேச அபிவிருத்தி அதிகாரிகள், சிறுவர் பராமரிப்பு அபிவிருத்தி அதிகாரிகள், சமூக சேவையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் பின் மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பி.பி.சிவப்பிரகாசம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மனித அபிவிருத்தி ஸ்தாபனம் ஊடாக, மலையக பிரதேசங்களில் உணவு பாதுகாப்பு மற்றும் உணவு போஷாக்கு தொடர்பில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய பெருந்தோட்டங்களில் 40 வீதமானோர் பட்டினி கிடக்கின்றனர். எஞ்சிய 60 வீதமானோர் ஒருவேளை அல்லது இருவேளை உண்கின்றனர். கர்ப்பிணி தாய்மார், பாலூட்டும் தாய்மார் மற்றும் சிறார்களின் உணவு பற்றாக்குறை நிலைமை மோசமாக உள்ளது.

இந்நிலையில் கொட்டகலை, நுவரெலியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உணவு பாதுகாப்பு தொடர்பான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துவருகின்றோம்.

உணவுப் பிரச்சினைக்கு தீர்வாக விவசாயம் ஊக்குவிக்கப்படுகின்றது. வீட்டுத் தோட்டம் செய்ய விதைகள், கன்றுகள் என்பன வழங்ப்படுகின்றன. மறுபுறத்தில் கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார் மற்றும் சிறார்களுக்கு உணவு வழங்கும் திட்டம் இடம்பெற்றுவருவதாக அவர் தெரிவித்தார்.

# மலையக சிறார்களுக்கு காலை, இரவு நேர உணவு வழங்கும் வேலைத்திட்டம்

நுவரெலியா தினகரன் நிருபர்



இலங்கையின் பொருளாதார நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மலையக சிறார்களின் பசி தீர்க்கும் நோக்கத்துடன் புதிய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

லங்கா விசன் எக்சன் பவுன்டேசன் மற்றும் அமெரிக்காவின் நண்பன் அறக்கட்டளை குழுவினரும் இணைந்து ஏற்பாடு செய்த இவ்வேலைத்திட்டம் தற்போது தோட்டப்பகுதிகளில் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் தற்போது 100 ஆவது நாளை கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட மலையக பகுதிகளின் சிறார்களுக்கு காலை மற்றும் இரவு நேர உணவு வழங்கப்பட்டுவருகின்றது.

இதுவரையில் சுமார் 40ஆயிரம் மலையக சிறுவர்களுக்கு இத்திட்டத்தின் மூலமாக உணவு வழங்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் இந்த திட்டத்தை நாடு முழுவதும் முன்னெடுப்பதற்கும் எதிர்பார்ப்பதாக இத்திட்டத்தின் லங்கா விசன் எக்சன் பவுன்டேசன் அமைப்பின் தலைமை அதிகாரி கீர்த்தனா தர்ஷனுன் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் 100 ஆவது நாள் நிறைவு அண்மையில் இறம்பொடை தோட்டத்தில் நடைபெற்றது. இதன்போது பொதுமக்களினால் ஆலய வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் சிறுவர்களுக்கு மதிய நேர உணவும் வழங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்புகின்றவர்கள் லங்கா விசன் எக்சன் பவுன்டேசன் அமைப்பின் தலைமை அதிகாரி திருமதி கீர்த்தனா தர்ஷனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# கழிவறை உபகரணங்கள் திருட்டு; நால்வர் கைது

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

ஹற்றன் சலங்கன்டி பகுதியிலுள்ள மக்கள் கூடும் மண்டபத்திலுள்ள கழிவறையில் உபகரணங்கள் களவாடிய நால்வர் ஹற்றன் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மண்டபத்தில் சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் பெறுமதியான கழிவறை உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் இதற்கு முன்னர் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து சந்தேகத்தின் பேரில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹற்றன் பொலிஸ் நிலைய அதிகாரி கண்ணன் மற்றும் சார்ஜன்ட் பிரியந்த உட்பட பொலிஸார் இவர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை நடாத்தி வருகின்றனர்.

# துப்பாக்கி,வெற்றுத்தோட்டாக்களுடன் ஒருவர் நாவலப்பிட்டியில் கைது

## வேட்டையாடப்பட்ட மானின் தோலும் மீட்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்)



நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலப்பிட்டி ஹபுகஸ்தலாவ பிரதேசத்தில் வீடொன்றிலிருந்து 12 ரக துப்பாக்கி மற்றும் வெற்றுத்தோட்டாக்கள், வேட்டையாடப்பட்ட மானின் தோல் ஆகியவற்றுடன் ஒருவர் நேற்றுமுன் (06.10.2022) கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபரிடமிருந்து அனுமதிப்பத்திரமின்றி வைத்திருந்த 12 ரக துப்பாக்கி ஒன்றும், வெற்றுத்தோட்டாக்களும், மானின் தோலும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் 29 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

நாவலப்பிட்டி நீதிமன்றத்தில் சந்தேகநபரை நேற்று (07.10.2022) ஆஜர்ப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் வன விலங்குகளை வேட்டையாடுவதற்காக துப்பாக்கியை பயன்படுத்தியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை, சந்தேக நபர் துப்பாக்கியை எங்கிருந்து எடுத்து வந்தார் என்ற கேள்விக்கு பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கசிப்பு போத்தல்களுடன் பாடசாலை அதிபர் கைது

பதுளை தினகரன் விசேட நிருபர்

கசிப்பு தயாரித்து வந்த அதிபரை பதவி நீக்கியதுடன், அவர் குறித்த விசாரணைகளை உடன் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படி, ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் நேற்று 07.10.2022 உத்தரவிட்டுள்ளார். கசிப்பு பாவனை மற்றும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த பதுளை மாவட்ட அரசபாடசாலை அதிபர் ஒருவர் குறித்த தகவல், பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இதனையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் இரண்டு போத்தல் கசிப்புடன், அதிபரொருவரை கைது செய்துள்ளனர்.

அதனைத்தொடர்ந்து அதிபர் விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது தமது வாழ்க்கையைக்கொண்டு நடாத்த பொருளாதார வசதியின்மையினால், கசிப்பு தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டதாக, அதிபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அம்பன்வெலவிற்கு கிடைத்த அறிவிப்பையடுத்து, அவர் குறித்த விசாரணைகளை மேற்கொண்டு, தமக்கு அறிக்கை உடன் சமர்ப்பிக்கும் படி, வலயக்கல்விப்பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# உள்ளூராட்சி மன்றங்கள் பாராட்டி கௌரவிப்பு

(பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)



மத்திய மாகாணத்தில் கொவிட் 19 வைரஸ் தொற்று பரவிய காலப்பகுதியில் அதனை கட்டுப்படுத்தும் வகையில் தடுப்பு மருந்தேற்றல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்த மத்திய மாகாண உள்ளூராட்சி மன்றங்களை பாராட்டி சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மத்திய மாகாண ஆளுநர் செயலக கேட்போர் கூடத்தில் (05) இடம்பெற்றது.

இதன்போது மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே பிரதம அதிதியாக கலந்துகொண்டு மத்திய மாகாணத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் பாராட்டி சான்றிதழ் வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் அக்குறணை பிரதேச சபைக்குரிய பாராட்டு சான்றிதழை அக்குறணை பிரதேச சபையின் உப தவிசாளர் ஏ.எம். சரத் அமரகோன் ஆளுநர் லலித் யூ கமகேயிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

# புசல்லாவ, இந்து தேசியக்கல்லூரியின் நவராத்திரி கலைவிழா

(ஹற்றன் சுழற்சி நிருபர்)




'புசல்லாவ, இந்து தேசியக் கல்லூரியின் நவராத்திரி கலைவிழா, கல்லூரி அதிபர் எஸ். சந்திரமோகன் தலைமையில், கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கண்டி மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜரட்னம், சிறப்பு அதிதியாக கம்பளை கல்வி வலயத்தின் தமிழ்க் கல்வி பிரிவு பணிப்பாளர் ஏ.எஸ். எழில்பிரியாவும் கலந்து சிறப்பித்தனர். பழைய மாணவர் சங்க செயலாளர் எம். கவாஸ்கரும் பங்கேற்றிருந்தார். நவராத்திரி விழாவையொட்டி நடைபெற்ற நிகழ்வுகளில் திறமையை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# மஸ்கெலியாவில் தோட்ட தொழிலாளர்கள் பணிபகிஷ்கரிப்பு

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலியா பிரதேசத்திலுள்ள ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உரித்தான சாமிமலை மல்லியப்பூ தோட்டத்தில் தொழிலாளர்கள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அவமதித்து 20 கிலோ பச்சை கொழுந்து பறித்தால் மாத்திரமே 1000ரூபா வழங்கப்படும். அதற்கு குறைவான அளவில் கொழுந்து பறித்தால் கிலோ ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் வழங்குவதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் ஆண்கள் காலை எட்டு மணி முதல் மாலை 6 மணி வரை பணிபுரிந்தால் மட்டுமே 1000ரூபா வேதனம் வழங்கப்படுமெனவும் தோட்ட நிர்வாகம் பணித்துள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# 'மலையக மக்களுக்கான உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும்'

## தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் கூட்டணி வலியுறுத்தல்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



"மலையக மக்களுக்கான சமூக நீதி தொடர்ச்சியாக மீறப்படுகின்றது. கல்வி, காணி, பொருளாதாரம் என மிக முக்கியமான உரிமைகள் கூட மறுக்கப்படுகின்றன. இந்நிலைமையை தொடர்ந்து அனுமதிக்க முடியாது. மலையக மக்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்தப்பட வேண்டும் " என்று தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

மலையக சிவில் மற்றும் தொழிற்சங்க, வெகுசன அமைப்புகள் இணைந்து ஹட்டனில் இன்று (07.10.2022) கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கத்தின் செயற்பாட்டாளர் எஸ்.டி.கணேசலிங்கம், சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பின் செயற்பாட்டாளர் இராஜேந்திரன், தோட்ட தொழிலாளர் மத்திய நிலையத்தின் அமைப்பாளர் டீ.மாக்ஸ் பிரபாகரர், ப்ரொடெக்ட் சங்கத்தின் உப தலைவி கருப்பையா மைதிலி, தோட்ட தொழிலாளர் மத்திய நிலையத்தின் செயலாளர் வசந்தகுமார அபேகோன் ஆகிய பிரதிநிதிகள் கலந்துகொண்டு, கருத்துகளை முன்வைத்தனர்.

இதன்போது தெரிவிக்கப்பட்ட முக்கிய கருத்துகள் வருமாறு,

கல்வி உரிமை, காணி உரிமை, பொருளாதாரம் உள்ளிட்ட உரிமைகள் மறுக்கப்படுகின்றன. எதையும் போராடியே பெற வேண்டும் என்ற நிலைமை உருவாகியுள்ளது. இந்நிலைமை நீடிப்பதை அனுமதிக்க முடியாது.

நாட்டுக்கு அந்நிய செலாவணியை பெற்றுக்கொடுக்கின்ற மலையக பெருந்தோட்டங்களை பாதுகாக்க வேண்டும்.

பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களை இளைஞர்களுக்கும், தொழில் இல்லாதவர்களுக்கும் பிரித்துக்கொடுக்க வேண்டும். உற்பத்திக்காக நிலங்களை வழங்கலாம் என ஜனாதிபதி கூட முன்மொழிவு செய்திருந்தார். ஆனால் இதற்கு மாறாக தோட்டக் கம்பனிகள் செயற்படுகின்றன. எமது மக்களுக்கான காணி உரிமை அவசியம் " என்று பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

# நுவரெலியா கோட்லோஜ் தோட்டத்தில் விசேட மகாயாக பூஜை

நுவரெலியா தினகரன் நிருபர்



சத்குரு சரவணபாபா சுவாமிகளின் ஜனன தினத்தை முன்னிட்டும் இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு மக்கள் நலமுடனும் வளமுடனும் வாழ வேண்டும் என்ற நோக்கத்துடனும் எதிர் வரும் 11.10.2022 செவ்வாய்க்கிழமை நுவரெலியா கோட்லோஜ் தோட்டத்தில் விசேட மகாயாக பூஜை நடைபெறவுள்ளது.

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ள யாக பூஜையில் வெளிநாடுகளிலிருந்து வருகை தருகின்ற முருக பக்தர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது கோட்லோஜ் தோட்டத்தின் குறிஞ்சி குமரன் ஆலயத்தில் அமைக்கப்படவுள்ள சுமார் 15 அடி உயரமான முருகன் சிலைக்கான அடிக்கல்லும் நாட்டப்படவுள்ளது.

அத்துடன் சத்குரு சரவணபாபா சுவாமிஜிக்கு இறையாசி வேண்டியும் இலங்கையின் மாற்றத்திற்காகவும் விசேட மகா ஆயுஷய ஹோமம் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு குறிஞ்சி குமரன் ஆலயத்தின் நிர்வாக சபையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



சர்வதேச கராத்தே சுற்றுப் போட்டியில்

# எண்பது பதக்கங்களை வென்ற ராம் கராத்தே சங்க மாணவர்கள்

சர்வதேச கராத்தே சுற்றுப் போட்டியில் 42 தங்கம் 18 வெள்ளி 20 வெண்கலம் அடங்கலாக மொத்தம் 80 பதக்கங்களை வென்று அக்கரைப்பற்று ராம் கராத்தே சங்க மாணவர்கள் வரலாற்று சாதனை படைத்துள்ளனர்.




தென்கிழக்கு பல்கலைக்கழக கலை அரங்கில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய ராம் கராத்தே மாணவர்களே இவ்வாறு சாதனை படைத்துள்ளனர்.

குறித்த சுற்றுப்போட்டியானது தென்கிழக்கு பல்கலைக்கழக கலை அரங்கில் கிழக்கு மாகாண கராட்டி சம்மேளனத்தின் தலைவரும் ஐ.ஆ.யுவின் பிரதம போதனாசிரியருமான சிகான் பொகமத் இக்பால் தலைமையில் நடைபெற்றது. இதன்போது இந்தியா மற்றும் இலங்கையின் பல பாகங்களில் இருந்து கராட்டி கழகங்களைச் சேர்ந்த 300 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்குபற்றியிருந்தனர். இப்போட்டியில் அக்கரைப்பற்று ராம் கராத்தே சங்கத்தின் சார்பில் 56 வீர வீராங்கனைகள் கலந்து கொண்டு 80 அதிகூடிய பதக்கங்களை பெற்றுக் கொண்டது மட்டுமல்லாது கிழக்கு மாகாணத்திற்கும் அம்பாறை மாவட்டத்திற்கும் முதன் முதலாக கூடிய தங்கம் வென்ற பெருமையையும் இம்மாணவர்கள் சேர்த்துள்ளனர்.

இம்மாணவர்களுக்கான பயிற்சியினை ராம்கராத்தே சங்க பிரதம போதனாசிரியர் சிகான் கே.கேந்திர முர்த்தியின் வழிகாட்டலில் கென்சி செயினுல் ஆப்தீன் கென்சி, ரி.வேள் கென்சி, கே.ராமேந்திர பிரசாத் கென்சி, கே.சரரங்கன் ஆகியோர் வழங்கியிருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.






கொழும்பு ஸாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்கம் அதன் வருடாந்த விளையாட்டு நிகழ்வுகளின் தொடரான " விளையாட்டு விழா " அண்மையில் நடத்தியது. கிரிக்கெட், கால் பந்து, ரக்பி, ஹோக்கி, நீச்சல், டேபிள் டென்னிஸ், ரைபிள் ஷூட்டிங், போன்ற போட்டிகளை நடத்தியது. 1960 ம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை பயின்ற பழைய மாணவர்கள் கிட்டத்தட்ட 40 பழைய மாணவ குழுக்கள் போட்டியில் பங்குபற்றின. இறுதி போட்டியில் 98 வது பழைய மாணவர் குழு வெற்றி பெற்றது. பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் அலவி முக்தார், செயலாளர் நுஸ்ரி முன்சூர் மற்றும் திட்டத் தலைவர் அஸ்ஹர் சலாஹுதீன் மற்றும் சங்கத்தின் நிர்வாகக் குழு ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு மாநகர சபை முன்னாள் மேயர் ஒமர் காமில் , கௌரவ அதிதியாக சிரச தொலைக்காட்சியின் ஆலோசகர் சிரிப்பாளி வன்னிஆரச்சி, கல்லூரி ஆளுநர் சபை தலைவர் பௌசுல் ஹமீட், அதிபர் ரிஸ்வி மரிக்கார் மற்றும் சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களும் இதில் கலந்து சிறப்பித்தனர். (படங்கள். எம்.நசார்)

## கமு/பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் வாணி விழா நிகழ்வு





கமு/பாண்டிருப்பு மகா வித்தியாலய அரங்கில் பாடசாலை அதிபர் சி.புனிதன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் எம்.லக்குணம், விஷேட அதிதியாக பாடசாலை மேம்பாட்டு திட்ட இணைப்பாளர் கிருஷ்ண குமாரி டேவிட், சிறப்பு அதிதிகளாக பிரபல வைத்தியர் கி. சுந்தர நாதன் , கே. பிரகலாதன், பி.துஷானந்தன், ஆர்.ரகுராஜ், ரி. சுந்தரேசன் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள், பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## சிவஞானத்தின் நினைவஞ்சலிக் கூட்டம்



ஸ்ரீ லங்கா நாயக்கர் காங்கிரஸுடன் நல்ல தொடர்புகளை பேணி வந்தவரும் சகல வழிகளிலும் இந்த சமூகத்துக்கு உதவி ஒத்துழைப்புகளை வழங்கி வந்தவருமான மனிதநேயம் கொண்ட பொதுப்பணியாளர் நெ.கா சிவஞானத்தின் மறைவையொட்டி இன்று மாலை 4 மணிக்கு கொழும்பு ஆமர் வீதி நாராயண குரு மண்டபத்தில் அன்னாரின் மக்கள் சேவையை நினைவு கூரும் முகமாக நினைவஞ்சலிக் கூட்டமொன்று நடத்தப்படவுள்ளது. இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஸ்ரீ லங்கா நாயக்கர் காங்கிரஸின் தலைவர் ஜீ. சண்முகவேல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலையில் சிரமதானம்





அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் மிக நீண்டகால வரலாற்றைக் கொண்ட அக்கரைப்பற்று அம்பாறை வீதியில் அமைந்துள்ள பிரதேச வைத்திய சாலையில் புதிய அபிவிருத்தி குழு ஏற்பாட்டில் மாபெரும் சிரமதானப்பணி அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. வைத்தியசாலையின் சுற்றுப்புற சூழலை சுத்தம் செய்யும் நோக்கில் வைத்தியசாலை அபிவிருத்தி சங்க தலைவர் வைத்திய அதிகாரி டாக்டர் நசீர் தலைமையில் (4) ஞாயிற்றுக்கிழமை இச்சிரமதான பணி மேற்கொள்ளப்பட்டது.

## களுத்துறை; தரம் 5 மாணவர்களுக்கு பயிற்சி புத்தகம் வழங்கும் நிகழ்வு



களுத்துறை மாவட்டத்திலுள்ள பெருந்தோட்ட பாடசாலைகளைச் சேர்ந்த தரம் ஐந்து மாணவர்களுக்கு மாதிரி வழிகாட்டி பயிற்சி புத்தகம் வழங்கும் நிகழ்வு இன்று (08) இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஹொரணை கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு காலை 9.30 மணிக்கும் களுத்துறை மற்றும் மத்துகமை கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு பி.ப. 2.30 மணிக்கும் வழங்கப்படவுள்ளது.

ஓம் சரவண பாபா சித்தர் மடாலயம் அனுசரணையுடன் சற்குரு ஸ்ரீஸ்ரீ சரவண பாபாவின் 43வது ஜெயந்தி தினம் எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளதை முன்னிட்டு இந்நிகழ்வு இரண்டாவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (5) புதன்கிழமை மாலை நடாத்திய அகில இலங்கைக்கான பாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற பதுளை கெந்த கொல்ல மகா வித்தியாலய ஆசிரியை மதூசா அத்தநாயக்கவுக்கு ஒரு லட்சம் ரூபாய் பணப்பரிசும் மற்றும் பல லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களுக்கான பணப்பத்திரங்களும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க, டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் இணைந்து வழங்குவதையும் படத்தில் காணலாம்.

# 9 ஆம் ஆண்டு உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் பன்னாட்டு தமிழ் தொழில் அதிபர்களுக்கு அழைப்பு



எதிர்வரும் ஜனவரி 6 மற்றும் 7ஆம் திகதிகளில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற உள்ள உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் 60ற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோர்கள், தொழில் கூட்டமைப்பினர் (1500 மேற்பட்டவர்கள்) கலந்து கொள்ள உள்ளனர்.

இந்நிகழ்வில் பல்வேறு நாட்டு அரசாங்க வர்த்தக ஆணையங்கள் கலந்து கொள்ள உள்ளன. இதன் மூலம் இந்தியாவில் உற்பத்தியாகும் பொருட்கள் அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ் சமுதாயம் பொருளாதாரத்தில் உயரும் வகையில் நிகழ்வு அமைய உள்ளது. இந்நிகழ்வில் 'வளரும் தமிழகம்' என்ற கண்காட்சி அமைக்கப்பட உள்ளது. இக் கண்காட்சியில் தமிழகத்தில் உற்பத்தி செய்யும் பொருட்களை காட்சிப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் ஏதுவாக அமைய உள்ளது. மேலும் தமிழகத்தில் உள்ள சிறு மற்றும் குறுந்தொழில் செய்யும் தொழில் முனைவோர்களின் இந்நிகழ்வு, 6 மற்றும் 7ஆம் திகதிகளில் B2B காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை இரண்டு நாட்களும் நடைபெற உள்ளது.

இங்கு தொழில் முனைவோரை சந்திக்கவும் 300க்கும் மேற்பட்ட தொழில் கூட்டமைப்புகளும், தனியார் தொழில் முனைவோர்களும் கலந்து கொண்டு தொழில் வாய்ப்புகளை பெற உள்ளனர். மாநில மத்திய அரசாங்கங்கள் தங்கள் மாநிலத்தில் உள்ள தொழில் வாய்ப்புகளை கருத்தரங்கு மூலம் விவரிக்க உள்ளனர். இதன் மூலம் தமிழ் சமுதாயம் மேன்மை அடைய ஒரு வாய்ப்பாக இருக்கும் என உலகத்தமிழ் வர்த்தக சங்கம் மற்றும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வ குமார் தெரிவித்தார்.

# இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் மீலாத்தின, சர்வதேச சர்வசமய கவியரங்கு




இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் மீலாத் தினத்தை முன்னிட்டு 09/10/2022 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு விசேட கவியரங்கு நடைபெறும். இது சர்வதேச சர்வசமய கவியரங்காக நடைபெறும். இவ்வாறான ஒரு கவியரங்கு நடப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டு கவிஞர் கலாபூஷணம் தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமையில் நடைபெறும் இக் கவியரங்கில் இலங்கையில் இருந்து பௌத்த கவிஞராக பொகவந்தலாவ ராகுல தேரர் அவர்களும், மதுரையில் இருந்து கிறிஸ்தவ கவிஞராக தமிழ்மாமணி அருட்தந்தை மணிவளன் அவர்களும், இந்து மத கவிஞராக புதுச்சேரி மாநிலத்திலிருந்து, தமிழ் மாமணி துறைமாலிறையன் அவர்களும் மலேசியாவில் இருந்து இஸ்லாமிய கவிஞராக கவிச்சுடர் பெருங்குளம் ஹாஜா மொஹிதீன் அவர்களும் கலந்து கொள்கின்றனர். முஸ்லிம் சேவை பணிப்பாளர் பாத்திமா ரினூஸியாவின் மேற்பார்வையில் இடம்பெறும் கவியரங்கினை முஹம்மத் ரலீம் தயாரித்து வழங்குகிறார்.

# போதைப் பழக்கத்தில் இருந்து இளைஞர்களை மீட்க காஷ்மீரில் இரவு வேளை விளையாட்டுப் போட்டிகள்



போதைப் பொருட்களின் ஆதிக்கத்தில் இருந்து ஜம்மு காஷ்மீர் இளைஞர்களை மீட்கும் ஒரு நடவடிக்கையான அங்கே விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க உள்ளதாகவும் ஹொக்கி மற்றும் கால்பந்தாட்டங்களை இளைஞர் மத்தியில் பிரசித்தப் படுத்தவுள்ளதாகவும் ஜம்மு காஷ்மீர் விளையாட்டு சபை தெரிவித்துள்ளது.

இரவு வேளைகளில் இளைய சமூகத்தினர் வீடுகளில் அடைந்து கிடக்க நேர்ந்து விடுவதே அவர்கள் மத்தியில் போதை பாவனை அதிகரிப்பதற்கான பிரதான காரணமாகக் கண்டறியப்பட்டிருப்பதால் தான் விளையாட்டு போட்டிகளை இரவில் நடத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டிருப்பதாக விளையாட்டு சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். விளையாட்டுகளில் பெண்கள் அதிக ஆர்வமாக இருப்பதாகவும் அவர்களை சமூக ரீதியாக வலுவூட்டுவதற்கு விளையாட்டுக்கள் உதவும் என்றும் இவர் மேலும் தகவல் தெரிவித்துள்ளார்.

எனவே தற்போது ஹொக்கி விளையாட்டுக்கான மைதானங்கள் உருவாக்கப்படுவதாகவும் கால்பந்தாட்டப் போட்டிகள் நடத்தப்படுவதாகவும் ஏனைய விளையாட்டுகளை இளைஞர் மத்தியில் பிரபலப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறியுள்ள இவர், கிரிக்கட் போட்டிகளை இரவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் குறிப்பிட்டார்.

# இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஓமானிய வெளிவிவகார அமைச்சருடன் சந்திப்பு



இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு ஓமானுக்கு சென்றிருந்த இந்திய வெளிவிவகார மற்றும் பாராளுமன்ற அலுவல்களுக்கான இராஜாங்க அமைச்சர் வி.முரளீதரன் ஓமான் வெளிவிவகார அமைச்சர் சையிட் பாதிர்பின் ஹமாத் அல் புசைதியை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இரு அமைச்சர்களும் பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் பேசினர். இந்திய இராஜாங்க அமைச்சர் அதன்பின் சிரேஷ்ட ஓமானில் உயர் அதிகாரிகளை சந்தித்தார்.

தனது விஜயத்தின்போது அந்நாட்டில் வாழும் இந்தியர்களை சந்தித்த இராஜாங்க அமைச்சர், அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். சுகாதாரம், கல்வி, வர்த்தக மற்றும் சமூக சேவை ஆகிய துறைகளைச் சேர்ந்த இந்தியர்கள் அமைச்சரை சந்தித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

மஸ்கட்டில் அமைந்துள்ள இந்தியத் தூதரகத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் அங்கு அமைக்கப்பட்டுள்ள நவீன நூலகத்தை திறந்து வைத்தார். வரலாறு, தத்துவஞானம், சர்வதேச தொடர்புகள் எனப் பலதரப்பட்ட விடயங்களைத் தாங்கிய ஆயிரத்துக்கும் அதிகமான நூல்களைக் கொண்ட இந்நூலகம் வாசகர்களுக்கு மிகப் பயனுள்ளதாக இருக்கும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# மினி மரதன் போட்டி இன்று

அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமாக அகில இலங்கை பாடசாலைகள் மினி மரதன் போட்டி இன்று (08) கம்பஹாவில் நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வுக்கு நெஸ்லே நெஸ்டமோல்ட் அனுசரணை வழங்குகிறது.

21 கிலோ மீற்றர் மினி மரதன் மற்றும் 5 கிலோ மீற்றர் ஓட்டத்தில் நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் இருந்து முறையே 300 மற்றும் 1,200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாகத் திகழ்ந்து வருகிறது. நாட்டில் விற்பனை செய்யப்படுகின்ற அதன் தயாரிப்புக்களில் 90 வீதத்திற்கும் மேற்பட்டவை குருணாகலிலுள்ள அதி நவீன தொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்பட்டு வருகின்றன.




## ஷம்ஸ், அல்–மனார் பழைய மாணவர் விளையாட்டு விழா

**பெரியநீலாவணை விசேட நிருபர்**

மருதமுனை வரலாற்றில் முதல் தடவையாக மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி மற்றும் அல்–மனார் மத்திய கல்லூரிகளில் கல்விகற்ற பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் சினேக பூர்வ உதைபந்தாட்ட போட்டியும் இன்று (08) மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டு விழாவில் ஷம்ஸ் மத்திய கல்லூரியில் 1997, 1998 ஆம் ஆண்டுகளில் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய பழைய மாணவர் அணிகளும், அல்–மனார் மத்திய கல்லூரியில் 1997,1998 ஆம் ஆண்டுகளில் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய பழைய மாணவர் அணிகளும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஸாஹிராக்கள் தோல்வி



பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்கு உட்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் கொழும்பு ஸாஹிரா மற்றும் கம்பளை ஸாஹிரா கல்லூரிகள் தோல்வியை சந்தித்தன.

பிரிவு ஒன்றில் போட்டியிடும் கொழும்பு ஸாஹிரா, கடந்த வியாழக்கிழமை (06) நடைபெற்ற போட்டியில் காலி மஹிந்த கல்லூரி அணியை எதிர்கொண்டது. இதில் தனது சொந்த மைதானத்தில் ஆடிய மஹிந்த கல்லூரி ஸாஹிராவை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தது.

எனினும் ஸாஹிரா கல்லூரியால் 35.4 ஓவர்களுக்கும் சகல விக்கெட்டுகளையும் இழந்து 124 ஓட்டங்களையே பெற முடிந்தது. உமர் இம்ரான் அதிகபட்சமாக 26 ஓட்டங்களை பெற்றார்.

இலகுவான இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய மஹிந்த கல்லூரி 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து அந்த இலக்கை எட்டியது.

இதேவேளை பிரிவு மூன்றுக்காக தனது சொந்த மைதானத்தில் ஆடிய கம்பளை ஸாஹிரா கல்லூரி கம்பளை, ஜினரத்ன ஆண்கள் கல்லூரியை எதிர்கொண்டது. எனினும் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட கம்பளை ஸாஹிராவால் சகல விக்கெட்டுகளையும் இழந்து 99 ஓட்டங்களையே பெற முடிந்தது.

ஜினரத்ன ஆண்கள் கல்லூரி 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

# ஓய்வு பற்றி முதல்முறை வாய் திறந்தார் மெஸ்ஸி

கட்டாரில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டியே தனது கடைசி உலகக் கிண்ணமாக இருக்கும் என்ற ஆர்ஜன்டீன கால்பந்து ஜாம்பவான் லியோனல் மெஸ்ஸி கூறியுள்ளார்.

ஐந்தாவது முறை உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் கலந்துகொள்ளவுள்ள 35 வயதான மெஸ்ஸி, இதுவரை கிண்ணத்தை வெல்லாத நிலையில் உலகக் கிண்ணத்தை எதிர்கொள்ளும் நிலையில் பதற்றத்துடன் இருப்பதாக பிரபல பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

“ஒரே நேரத்தில் ஏக்கமாகவும் பதற்றமாகவும் உள்ளது. இது (எனக்கு) கடைசியாக இருக்கும்” என்று ஸ்டார் பிளஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மெஸ்ஸி குறிப்பிட்டார்.

பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் முன்கள வீரரான மெஸ்ஸி, தனது எதிர்காலம் பற்றி வெளிப்படையாக



பேசுவது இது முதல்முறையாகும். எனினும் கட்டார் உலகக் கிண்ணத்திற்கு பின் தேசிய அணியில் இருந்து ஓய்வு பெறுவது பற்றி அவர் உறுதியாகக் கூறவில்லை.

ஆர்ஜன்டீனா கடைசியாக ஆடிய 35 போட்டிகளில் தோல்வியுறாத அணியாகவே இம்முறை உலகக் கிண்ணத்தில் களமிறங்குவதோடு, 2021இல் பிரேசிலுக்கு எதிரான கோப்பா அமெரிக்கா இறுதிப் போட்டியில் வெற்றியீட்டிய உற்சாகத்துடனேயே கட்டார் வரவுள்ளது.

“உலகக் கிண்ணத்தில் எதுவும் நிகழலாம். அனைத்துப் போட்டிகளும் கடினமாக இருக்கும். வெற்றி வாய்ப்பு அதிகமுள்ள அணிகள் எப்போதும் வெற்றியாளர்களாக இருப்பதில்லை” என்று மெஸ்ஸி கூறினார்.

1978 மற்றும் 1986இல் உலகக் கிண்ணம் வென்றிருக்கும் ஆர்ஜன்டீனா, சி குழுவுக்காக தனது முதல் போட்டியில் வரும் நவம்பர் 22ஆம் திகதி சவூதி அரேபியாவை எதிர்கொள்ளவுள்ளது. தொடர்ந்து அந்த அணி மெக்சிகோ மற்றும் போலந்து அணிகளுடன் பலப்பரீட்சை நடத்தும்.

## சம்புநகர் அல்–மினா வித்தியாலய கிராமிய விளையாட்டுப் போட்டிகள்



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை சம்புநகர் அல் –மினா வித்தியாலயத்தில் பாரம்பரிய கிராமிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

அல்–மினா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் எம்.எச். அப்துல் ஹை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று அனீஸ் மால் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.சீ. அனீஸ், ஓய்வு பெற்ற சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் என். சம்சுதீன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

இதன்போது பலூன் உடைத்தல், சாக்கோட்டம், சங்கீதக் கதிரை, போத்தலில் நீர் நிரப்புதல், யானைக்கு கண் வைத்தல் மற்றும் முட்டி உடைத்தல் போன்ற போட்டிகள் நடைபெற்றன.

## டி20 உலகக் கிண்ணம்: பிரிட்டோரியர்ஸ் நீக்கம்




தென்னாபிரிக்க அணியின் முன்னணி சகலதுறை வீரர்களில் ஒருவரான டுவைன் பிரிட்டோரியர்ஸ் உபாதை காரணமாக டி20 உலகக் கிண்ணத்துக்கான குழாத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணிக்கு எதிராக நடைபெற்று முடிந்த மூன்றாவது டி20 போட்டியின் போது, இடதுகை பெருவிரலில் உபாதை ஏற்பட்டதன் காரணமாக அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டுவைன் பிரிட்டோரியர்ஸின் பெருவிரலில் சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதுடன், இதனால் இந்திய அணிக்கு எதிரான ஒருநாள் தொடர் மற்றும் டி20 உலகக் கிண்ணத்துக்கான குழாத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

டுவைன் பிரிட்டோரியர்ஸிற்கு பதிலாக மார்க்கோ யான்சன் இந்திய அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் இணைக்கப்பட்டுள்ளார். எனினும், பிரிட்டோரியர்ஸிற்கு பதிலாக டி20 உலகக் கிண்ண குழாத்தில் எந்த வீரர் இணைக்கப்படுவார் என தென்னாபிரிக்க அணி இதுவரையில் அறிவிக்கவில்லை.

எனினும் மார்கோ யான்சன், எண்டிலே பெஹ்லுக்வாயோ மற்றும் பிஜியோன் போர்ட்டியூன் ஆகியோர் டி20 உலகக் கிண்ணத்தின் மேலதிக வீரர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். எனவே, இவர்களில் ஒருவர் டி20 உலகக் கிண்ண அணியில் இணைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## முக்கோணத் தொடரில் பாகிஸ்தானுக்கு வெற்றி



நியூசிலாந்தில் நடைபெறும் முக்கோண டி20 தொடரின் முதல் போட்டியில் பங்களாதேஷ் அணியை பாகிஸ்தான் 21 ஓட்டங்களால் வீழ்த்தியது.

கிறிஸ்சேர்ச்சில் நேற்று (07) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பாக். அணிக்காக ஆரம்ப வீரர் முஹமது ரிஸ்வான் 50 பந்துகளில் ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களை விளாசினார்.

இதன்மூலம் பாகிஸ்தான் அணி 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய பங்களாதேஷ் அணி முக்கிய இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது. இதனால் அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களையே பெற்றது. மத்திய பின் வரிசையில் வந்த யாசிர் அலி 21 பந்துகளில் ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களை பெற்றார்.

இந்த முக்கோணத் தொடரில் போட்டியை நடத்தும் நியூசிலாந்து அணி இன்று (08) தனது முதல் போட்டியில் பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

# உலக கெரம் சம்பியன்ஷிப்பில் இலங்கைக்கு இரு பதக்கங்கள்

மலேசியாவில் நடைபெற்றுவரும் 8ஆவது உலக கெரம் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை அணி 2 வெண்கலப் பதக்கங்களை சுவீகரித்துள்ளது.

இதில் ஆண்களுக்கான இரட்டையர் பிரிவில் இலங்கை சார்பில் போட்டியிட்ட முன்னாள் உலக கெரம் சம்பியன் நிஷாந்த பெர்னாண்டோவும் ஷஹீட் ஹில்மியும் இணைந்து வெண்கலப் பதக்கத்தை வென்று கொடுத்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை (04) நடைபெற்ற ஆண்களுக்கான இரட்டையர் பிரிவு வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் பங்களாதேஷ் அணியை எதிர்த்தாடிய இலங்கை



அணி 2–1 ப்ரேம்கள் கணக்கில் வெற்றிபெற்று 3ஆம் இடத்தைப் பிடித்தது.

இதனிடையே, கடந்த புதன்கிழமை (05) நடைபெற்ற சுவிஸ் லீக் போட்டியில் பங்குகொண்ட ஷஹீட் ஹில்மி வெண்கலப் பதக்கம் வென்றார். 8 சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியின் முதல் 7 சுற்றுக்களிலும் வெற்றியீட்டி முதலிடத்தைப் பிடித்த அவர், கடைசி சுற்றில் இந்திய வீரர் மொஹமட் குர்பானிடம் தோல்வியைத் தழுவினார்.

கொழும்பு றோயால் கல்லூரியின் பழைய மாணவரான ஷஹீட் ஹில்மி, இலங்கையின் நடப்பு தேசிய கெரம் சம்பியனாக உள்ளார்.

## பீனிக்ஸ் சர்வதேச பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம் பீனிக்ஸ் சர்வதேச பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் அண்மையில் (06) கோலாகலமாக நடைபெற்றன.

பாடசாலையின் பணிப்பாளர் ஷப்ரினா மில்ஹான் தலைமையில் இரு தினங்களாக நடைபெற்ற நிகழ்ச்சிகளின் இறுதி நாள் போட்டி நிகழ்ச்சிகளின் பிரதம அதிதியாக புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக் கலந்து தேசியக் கொடியை ஏற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

கௌரவ அதிதிகளாக புத்தளம் நகரசபை உறுப்பினர்கள் பர்வின் ராஜா, ரனீஸ் பதுர்தீன், ஜௌபர் மரைக்கார் மற்றும் ஜெமீனா இல்யாஸ் அடங்கலாக மேலும் பலர் கலந்துகொண்டனர்.

ரோயல்வுட்லேன்ட் மற்றும் ஏசியன் டிபன்டர் ஆகிய இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டிகளில் சம்பியனாக ஏசியன் டிபன்டர் இல்லம் தெரிவானது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# பால் உற்பத்திக்காக சொந்தமாக கால்நடை தீவனத்தை தயாரிக்கும் பெல்வத்தை நிறுவனம்



பல்வேறு வகையான பால் பொருட்களை உற்பத்தி செய்து நாட்டிற்கு பெறுமதியான அந்நியச் செலாவணியை சேமிக்க உதவும் இலங்கையின் முன்னணி உள்ளூர் பால் வர்த்தக நாமங்களில் ஒன்றான Pelwatte Dairy, இலங்கையின் பால் நுகர்வோரின் இதயங்களை வென்றுள்ளது. இதற்காக, நிறுவனம் அதன் பால் நுகர்வோருக்கு தொடர்ச்சியான அர்ப்பணிப்பை மேற்கொண்டு வருகிறது.

பெல்வத்தை தனது சொந்த கால்நடை தீவனத்தை தயாரிப்பதில் புகழ்பெற்று விளங்குகின்றது. 2009 ஆம் ஆண்டு முதல் கால்நடை தீவன உற்பத்தியின் தரத்தை பேணியவாறு, பெல்வத்தை அதன் சொந்த கால்நடை உணவு உற்பத்தியை மேற்கொள்ள ஆரம்பித்தது. கறவை மாடுகளின் தீவனத்தின் தரம் மற்றும் அளவு என்பனை கறவை மாடுகள் உற்பத்தி செய்யும் பாலின் தரம் மற்றும் அளவு ஆகியவற்றில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துவதால், கறவை மாடுகளின் தீவனம் வழக்கமான மாட்டுத் தீவனத்தை ஒத்ததாக அமைந்திருக்காது.

தீவன ஆலைக்கு பொறுப்பான இயந்திரவியல் பொறியியலின் சிரேஷ்ட நிறைவேற்றதிகாரி பீ.ஏ.பீ. குமார இது தொடர்பில் தெரிவிக்கையில், "விலங்குகளின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் நுகர்வோருக்கு சுவையான பாலை வழங்குவதற்கும் பசுவின் போஷாக்கு பிரதானமான மற்றும் முக்கியமான காரணியாக இருப்பதை பெல்வத்தை அடையாளம் கண்டுள்ளது. தினமும் 60 மெட்ரிக் தொன் உயர்தர கால்நடைத் தீவனத்தை உற்பத்தி செய்வதனை முன்னுரிமை அளித்து கால்நடை தீவன ஆலையை நாம் அமைத்துள்ளோம்.

இறக்குமதி தொடர்பான நாட்டின் பெறுமதி மிக்க அந்நியச் செலாவணியைச் சேமிப்பதில் பெயர் பெற்ற ஒரு தேசிய பால் உற்பத்தியாளர் எனும் வகையில், இந்த ஆலை நிறுவப்பட்டதில் இருந்து, பெல்வத்தை தனது சொந்த கால்நடைத் தீவனத்தை பல ஆண்டுகளாக உற்பத்தி செய்து வருகின்றது .

இலங்கைக்குள் ஒவ்வொரு மாதமும் 300 மெட்ரிக் தொன்னுக்கும் அதிகமான மாட்டுத் தீவனத்தை உற்பத்தி செய்கிறோம் " என்றார். பெல்வத்தை கால்நடை தீவன உற்பத்திச் செயன்முறையானது முழுமையாக தரத்தை கடைபிடிக்க வேண்டியதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சோளம் மற்றும் அரிசி போன்ற மூலப்பொருட்கள் முதலில் தூசி மற்றும் ஏனைய கரடுமுரடான பொருட்கள் இன்றி நீக்கப்பட்டு நன்கு சுத்தம் செய்யப்படுகின்றன.

சிறிய மற்றும் பெரிய மூலப்பொருட்கள் தொகுதிகளாக ஒழுங்கமைக்கப்பட்டு அவை கலக்கப்படுகின்றன. அதன் பின்னர் கலவையின் தரம் இறுதி தயாரிப்பின் ஒட்டுமொத்த தரத்தை தீர்மானிக்கிறது என்பதால் கலத்தலானது ஒரு முக்கியமான செயன்முறையாகும்.




# இலங்கை அணிக்கான T-20 உலகக் கிண்ண கிரிக்கெட்

## ஜெர்சியினை அறிமுகம் செய்யும் MAS

தெற்காசியாவின் மிகப்பெரிய ஆடை தொழில்நுட்ப உற்பத்தி நிறுவனமான MAS Holdings, இந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் (ICC) ஆண்களுக்கான T20 உலகக் கிண்ண இலங்கை தேசிய அணிக்கான உத்தியோகபூர்வ கிரிக்கெட் ஜெர்சியை அறிமுகப்படுத்தியது. MAS Holdings நிறுவனத்தின் தலைவர் மகேஷ் அமலியன் மற்றும் MASஇன் பிரதம நிறைவேற்று அதிகாரி செலான் குனதிலக்க ஆகியோரால் இலங்கை T20 உலகக் கிண்ண கிரிக்கெட் அணித் தலைவர் தசுன் ஷானக்க மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா ஆகியோரிடம் 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதி ஜெர்சியை வடிவமைத்து உற்பத்தி செய்த MAS Active நிறுவனமான கட்டுநாயக்க Nirmaana MAS Active இல் நடைபெற்ற நிகழ்வின் போது கையளிக்கப்பட்டது.



2022 ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் சாம்பியன் ஆவதில் அணியின் பெருமையை பிரதிபலிக்கும் வகையிலும், அணியின் பெருமையை உணர்த்தும் வகையிலும் இந்த ஜெர்சி வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2022 ICCT20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கு முன்னதாக, வியர்வை காரணமாக உடலில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஆடைகளுடன் விளையாடுவது கடினம் என்று வீரர்கள் கருத்து தெரிவித்தனர். இந்த புத்தம் புதிய ஜெர்சியை, அக்டோபரில் அதிக ஈரப்பதம் கொண்ட ஆஸ்திரேலிய மைதானங்களின் சுற்றுச்சூழல் நிலைமைகளை மதிப்பீடு செய்து, வானிலை முறைகள், வெப்பநிலை மற்றும் மனித உடலின் வியர்வை சுரப்பிகள் ஆகியவற்றை ஆராய்ந்த பின்னர் MAS Active குழுவால் வடிவமைக்கப்பட்டது. MAS Active பல்வேறு அளவிலான காற்றோட்டம் கொண்ட துணிகளை உருவாக்கியது, இது விளையாட்டு வீரரின் புத்துணர்ச்சி மற்றும் வசதிக்காக வியர்வையை விரைவாக ஆவியாக்குகிறது. இது இலகுரக, அதிக உறிஞ்சக்கூடிய, நீட்டக்கூடிய துணிகளைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது, மேலும் தற்போதுள்ள மற்றும் ஈரப்பத மேலாண்மை தொழில்நுட்பத்துடன் கூடுதலாக வசதியை பராமரிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

# யூனியன் வங்கியின் "Walk & Win" திட்டத்துக்கு ஊழியர்களிடமிருந்து பெரும் வரவேற்பு



யூனியன் வங்கி விளையாட்டுக் கழகத்தினால், அதன் ஊழியர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் மத்தியில் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் விதமாகவும், புத்தாக்கமான "Walk & Win" மெய்நிகர் நடை சவால் 2022 செப்டெம்பர் மாதத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஆரோக்கிய app இனூடாக இந்தத் திட்டம் டிஜிட்டல் முறையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. 21 நாட்களில் 945,000 அடிகளை இலக்காகக் கொண்டதாக இந்த சவால் அமைந்திருந்ததுடன், அணிக்கு 5 பேரைக் கொண்ட குழுவினரால் இது எய்தப்பட வேண்டியிருந்தது. இவர்கள் புதிர்போட்டிக்கான தகைமையை பெற்றிருந்தனர். இந்த சவாலில் வங்கியிலிருந்து 98 அணிகள் ஆர்வத்துடன் பங்கேற்றதுடன், இறுதிச் சுற்றில் 9 அணிகள் பிரவேசித்திருந்தன. ஐந்து அணிகள் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டு பணப்பரிசுகள் வழங்கப்பட்டிருந்தன. உள்ளக கணக்காய்வு மற்றும் விற்பனை (அடகுச் சேவை) திணைக்களங்களைச் சேர்ந்த IAD Jolly Walkers அணி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டதுடன், ரூ. 100,000 பணப்பரிசையும் சுவீகரித்தது.

யூனியன் வங்கியின் விளையாட்டுக் கழகத்தினால், ஊழியர்களின் நலனை மேம்படுத்துவது மற்றும் ஊழியர்களிடையே தொடர்புகளை பேணுவதற்காக வருடம் முழுவதிலும் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. Walk & Win மெய்நிகர் அடி சவால் என்பது இவ்வாறு முன்னெடுக்கப்பட்டிருந்த மற்றுமொரு வெற்றிகரமான ஊழியர் ஈடுபாட்டுத் திட்டமாகும். ஊழியர்களின் மனநிலையை மேம்படுத்தும் வகையில் இது அமைந்திருந்தது.

# CDB இனால் இரத்த தான முகாம் வெற்றிகரமாக முன்னெடுப்பு

இலங்கையின் தேசிய குருதி நிலையம் அவசர குருதித் தேவையை கொண்டிருக்கின்றமையை கவனத்தில் கொண்டு, சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி (CDB), வெற்றிகரமான குருதி நன்கொடை வழங்கும் இரத்த தான முகாமை முன்னெடுத்திருந்தது.

CDB இன் நலன்புரிச் சங்கம் மற்றும் மனித வளங்கள் பிரிவின் ஆதரவுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த இரத்த தான முகாம் தொடர்பில், சகல ஊழியர்களுக்கும் அறிவிக்கும் உள்ளக சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

இலங்கை மக்களின் சுகாதார நலன் தொடர்பில் பெருமளவு கரிசனையுடன் பணியாற்றும் CDB இன் 140 ஊழியர்கள் இந்த இரத்த தான முகாமில் பங்கேற்றனர். இவ்வாறான இரத்த தான முகாமை ஏற்பாடு செய்திருந்த ஐந்தாவது தடவையாக இது அமைந்திருந்ததுடன், இதற்கு தேசிய குருதி நிலையத்தின் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் இதர ஆதரவு ஊழியர்களின் உதவிகள் பெறப்பட்டிருந்தன.

இந்தத் திட்டம் தொடர்பில் மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவின் சிரேஷ்ட பொது முகாமையாளர் நயந்தி கோதாகொட கருத்துத் தெரிவிக்கையில், "இந்தக் கால கட்டத்தில் தேசிய குருதி நிலையத்தின் இரத்த தானம் வழங்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையை நிறைவேற்றுவது எமது கடமை என CDB ஐச் சேர்ந்த நாம் உணர்ந்தோம். சகல குருதி மற்றும் குருதி சார் தயாரிப்புகளும் தன்னார்வ நன்கொடைகளினூடாக நிவர்த்தி செய்யப்படும் சில நாடுகளில் ஒன்றாக இலங்கையும் அமைந்துள்ளது. இவ்வாறான நன்கொடை நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு நாம் தொடர்ச்சியாக ஆதரவை வழங்குவதுடன், அதனூடாக பல தசாப்த காலப்பகுதிக்கு தற்போதைய நிலையை பேணக்கூடியதாக இருக்கும்." என்றார்.



# உலக சிறுவர் தினத்தை சிறப்பாக கொண்டாடியது HNB



ஒக்டோபர் 1ஆம் திகதி உலக சிறுவர் தினத்துடன் இணைந்து, குழந்தைகளின் திறமையையும் படைப்பாற்றலையும் பாராட்டி, அவர்கள் மத்தியில் சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவித்து, Giftober மாதத்துடன், குழந்தைகளுக்கு எப்போதும் சிறந்ததை வழங்கும் HNB, இந்த ஆண்டும் பல கவர்ச்சிகரமான பரிசுகள் மற்றும் சலுகைகளுடன் உலக சிறுவர்கள் தினத்தை பிரமாண்டமாக கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

HNB ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு முக்கிய கொண்டாட்ட நிகழ்வு வெள்ளவத்தை HNB வாடிக்கையாளர் பிரிவில் HNB முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ஜொனதன் அலஸ் தலைமையில் நடைபெற்றது. HNB வைப்புப் பிரிவு பிரதானி விரங்க கமகே, HNB பிராந்தியத் தலைவர் தென்மேற்கு, மஹிந்த செனவிரத்ன மற்றும் HNB ஊழியர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

இம்முறை, நாடு முழுவதுமுள்ள 40 HNB வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு 4000 சிறுவர் கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களை வங்கி அவர்களுடன் உலக சிறுவர் தினத்தை கொண்டாட அழைத்தது. அன்றைய தினம் கலந்து கொண்ட குழந்தைகளுக்காக பல வினோத விளையாட்டுகளும், பல்வேறு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

இத்துடன் குழந்தைகளுக்கான சித்திரப் போட்டி உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

## டராஸ் மூன்றாவது வருடமாக தனது "ஒட்டுமொத்த கார்ட் அடிப்படையிலான சிறந்த செயற்பாட்டு" வங்கியாக கொமர்ஷல் வங்கியை தெரிவு செய்துள்ளது




தெற்காசியாவின் மிகப் பெரிய இலத்திரனியல் வர்த்தக மேடையான டராஸ் இன் 'கொடுப்பனவு பங்காளி செயற்பாட்டு விருது 2022' நிகழ்வின் போது, "ஒட்டுமொத்த கார்ட் அடிப்படையிலான சிறந்த செயற்பாட்டு" வங்கியாக கொமர்ஷல் வங்கி தொடர்ந்து மூன்றாவது வருடமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.2021/2022 நிதி ஆண்டு காலப்பகுதியில் கிரடிட் மற்றும் டெபிட் கார்ட் தளங்கள் மூலம் ஆகக் கூடுதலான அளவு கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுத்தமை மற்றும் பெருமளவு சிறந்த கொள்வனவாளர்களை டராஸ் இணைய மேடைக்குப் பெற்றுக் கொடுத்தமை என்பனவற்றுக்காக இந்த கீர்த்தி மிக்க விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதை தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக வென்றுள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கி கொமர்ஷல் வங்கியாகும்.

2021/22 காலப் பகுதியில் டராஸ் மேற்கொண்ட இணைய வழி ஊக்குவிப்புக்களின் போது கொமர்ஷல் வங்கி கார்ட்டுகளே பெருமளவான விற்பனையைப் பெற்றுக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதில் டராஸ் 11.11 மற்றும் டராஸ் 12.12 என்பனவும் அடங்கும். இவை தான் இலங்கையின் மிகப் பெரிய இணையவழி பொருள் கொள்வனவு கொண்டாட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

# யாழ்ப்பாணத்தில் SLT–MOBITEL முன்னெடுக்கும் "இணைக்கும் வசந்தம்" ஊக்குவிப்புத் திட்டம்

SLTMOBITEL The Connection

யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு புதிதாக அதிவேக இணைய இணைப்புகளையும், PEO தொலைக்காட்சி இணைப்புகளையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையும், ஏற்கனவே காணப்படும் தமது இணைப்புகளை மெருகேற்றிக் கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்க இலங்கையின் தேசிய தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்கும் SLTMobitel முன்வந்துள்ளது. இதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள SLTMOBITEL பிராந்திய அலுவலகத்துக்கு அண்மையில் "இணைக்கும் வசந்தம்" எனும் தொனிப் பொருளில் விசேட ஊக்குவிப்பு நிகழ்வை ஒக்டோபர் 3 ஆம் திகதி ஆரம்பித்தது. இது 9 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும்.

இந்த நிகழ்வில் புதிய இணைப்புகளைப் பெற்றுக் கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு பல வெகுமதிகளை வழங்க SLTMOBITEL முன்வந்துள்ளது. SLTMOBITEL Fibre இணைப்புகளைப் பெற்றுக் கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக 100 GB வசதியும், 25 GB YouTube வசதியும் வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் SLTMOBITEL இன் தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ, குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க, மொபிடெல் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரென மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்த பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# இதயத்திற்கு இதமாக உலக இதய தினத்தைக் கொண்டாடிய Flora




இதயத்தின் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும் உடல்ரீதியான செயல்பாடுகள் மற்றும் ஆரோக்கிய வாழ்க்கைமுறைக்கு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் அறிவுப்பகிர்வு நிகழ்வை Flora ஏற்பாடு செய்திருந்தது.

உலக இதய தினத்தை முன்னிட்டு கொழும்பு, பார்க் வீதியில் செப்டெம்பர் 29ஆம் திகதி வெகு சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வில் இதயநோய் சத்திரசிகிச்சை, இதயநோய் வைத்திய நிபுணர் வைத்தியர் டி. சில்வா, யோகா ஆசிரியர்களான ஆரன் விக்கிரமசிங்க, அவரது மனைவி அன்னி ஆவ், நகைச்சுவை கலைஞர்களான இரட்டையர்கள் ப்ளாக் மற்றும் டினோ ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதயநோய் தொடர்பான ஆபத்து மதிப்பீட்டை மேற்கொள்ள உதவும் வகையில் Ayubo life இன் ஏற்பாட்டில் இதயக்குழாய் நோய்களை அளவிடுவதற்குப் பயன்படும் பரிசோதனைக் கருவியைக் கொண்டு மதிப்பீடு செய்யும் நிகழ்வுடன் ஆரம்பமானது.


ஆதனைத் தொடர்ந்து 'ஆரோக்கியமான உள்ளம் என்பது ஆரோக்கியமான இதயத்தில் தங்கியுள்ளது' எனும் தலைப்பில் நடைபெற்ற 15 நிமிட யோகா பயிற்சிகளில் நிகழ்வுக்கு வந்திருந்த அனைவரும் கலந்துகொண்டனர்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்



# சாவரம் பெற்று உயிர்த்தெழும் ஜீவன்

இலைகள் உதிர தனித்த மரங்களின்
பூங்கனவுகள் சிதைகிற கோலம்
இரவுக் கரும்பலகையில்
மயான நிசப்தத்தால்
காலம் எழுதிச் செல்லும்.

பயம் துளிர்த்த அச்சத்தோடு
பூமியின் மார்பு வெடிக்க
சாவரம் பெற்று உயிர்த்தெழும் ஜீவன்கள்
ஒளிப் பாசணங்களை அருந்தி
மரணத்தை

கூவியழைக்கிற இசை கவிந்து
மண்ணின் முகத்தில் படியும்
பிண கோலங்களாய்

ஈசல்கள்,ஈசல்களின் வாழ்வை
அறிந்து கொள்ளும் முனைப்புடன்
சந்தேகம் வினவி
தோற்றுத் திரும்பும் நிமிஷங்களில்
விடிந்து கிடக்கும் காலை

கூட்டிப் பெருக்குகிற ஈர்க்குகளுக்கும்,
கொத்தி தின்னுகிற அலகுகளுக்கும்
ஒரு பொழுதுக்குள் நிகழ்ந்த
பெரும் துயர அவலம்
அலட்சியமாகவே இருக்கும்.
எப்போதையும் போல்

**ரோஷான் ஏ.ஜிப்ரி**
வாங்காமம்



# மறக்கொன்னா மழலைப் பருவம்

மறக்கொன்னாப் பருவமது
மகிழ்ச்சிக்குப் பஞ்சமில்லாக் காலமது
சிக்கனம் என்பதற்கு சிறிதும்
அர்த்தங்கள் அறியாச் சிறு பருவமது

எங்களுக்கு
வானமும் அடிமை
பூமியும் அடிமை

காற்றைச் சிறையெடுத்து
கயிற்றில் கட்டி
நிலவுக்குத் தூண்டிலிட்டு
நிலாச் சோறாக்கி நித்தமும் உண்போம்

நின்மதியாய் உறங்குவோம்
மகிழ்ச்சியாய் விழிப்போம்
சேட்டைகள் செய்வோம்
அனைவரையும் அடிமையாகச் சொல்லி
அடம்பிடிப்போம்

பட்டாம்பூச்சியின்
வர்ணங்களை வழித்தெடுத்து
வானமெங்கும் தூவவிட்டு
வானவில்லை அடையாளம் காட்டுவோம்

மல்லாக்கப் படுத்து
நட்சத்திரங்களை எண்ணி
நயம் கொட்டிச் சிரிப்போம்

அரசியல் செய்ய மாட்டோம்
எங்களுக்கு நாங்களே
ராஜாக்களாகவும், மந்திரிகளாகவும்
மகுடம் சூடிக்கொள்வோம்

கனத்த மழையில்
அம்மாவுக்குத் தெரியாமல் நனைவோம்
மழையை
வீட்டினுள் அழைத்து வருவோம்
அடி வாங்குவோம்
மறுபடியும் மழை பெய்தால்
அதே தவறை மறுபடியும் செய்வோம்

இது எங்களின்
மழலைப் பருவமென
மகிழ்ச்சிகொள்வோம்
எங்களை நாங்களே செதுக்கி
சிற்பிகளான காலம்

காலங்கள் மாற மாற எங்கள்
கனவுகளும் மாறின
பருவங்களும் மாறின
இளமை களவுபோனது எங்கள்
இன்பங்களும் களவுபோனது

இன்று
ஏதோ ஒரு
சுயநலச் சமுகத்திற்குள்
வாழ்ந்துகொண்டிருக்கிறோம்

இக்காலச் சிறுவர்களே இந்த
சாக்கடைச் சமுகம்
பூக்கடை ஆவதெப்போ?

**பொத்துவில் இஸ்மட்**

# காதல் வலி புலம்பல்

அழகிய தனிமையுடன்
நழுவிய காதலைப்
பற்றி உரைத்துப்
போகிறது கண்ணீர்
வடிவில் வலிகள்.

துடிக்கத் தொடங்கிய
இதயம் , அவளை
மறக்கத் தெரியாமல்
அடங்கிப் போவது
ஏனோ!

நம் காதலுடன்
கை கோர்த்துப்
போன சாலைகள்
எங்கும் பலர்
பூக்கள் வீசிப்
போவது ஏனோ!

இழந்த மனம்
உணர்ந்து போகவில்லை
மறந்து போன
அவளின் நினைவுகளை
சுமந்தபடி கடக்கின்றது
காலம் என
கூறிப் போகிறது
என் கல்லறை.

எழுந்திட மாட்டேன்
என எண்ணி
உடைத்துப் போனாளோ
எனத் தெரியவில்லை ,
இருந்தும் வலிகளை
உங்களிடம் கொடுத்து
விட்டு போகிறேன்
பத்திரமாய் பார்த்துக்
கொள்வீர்கள் என
எண்ணி



**பொத்துவில் அஜ்மல்கான்**

# பகிரப்படாத சாவி



எத்தனை காலங்கள் ஓடிவிட்டன
எத்தனை வயதுகள் கடந்து விட்டன
இன்னும் இருக்கத்தான் செய்கின்றன
மனதோடு மனதாக
மனதோரம் ஈரக்கசிவாக
மனதின் மூலையில் வடுவாக

இதயவறைகளில் தட்ட முடியாத ஒட்டடையாக
சில ரகசியங்கள்
சில ஆசைகள்
சில தேவைகள்
சில தாகங்கள்
சில அதிர்வுகள்
சில ஆதங்கங்கள்
சில மௌனங்கள்

இன்னும் பகிரப்படாத சாவியாக
இருக்கத்தான் செய்கின்றன


இதயத்தினுள்ளே

அது அடர்ந்த காட்டில்
தனியே ஒலிக்கும்
குயில் ஓசை போல
தாயை இழந்த
கன்றுக்குட்டியின் அலறல் போல
தாகித்த ஒட்டகம் போல
ஏக்கங்களுடன்!

இன்னும் திறக்கப்படாத சாவியாக
இருக்கத்தான் செய்கின்றன இதயத்தினுள்ளே..
சில ஓசைகள்!

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை

# ஆசிரியர்



மாதா பிதா குரு
தெய்வம் என்று
பெற்றோருக்கு
அடுத்த உயர்ந்த
இடத்தில் இருப்பவர்

வேறு எந்த
பணிக்கும் கிடைக்காத
பெருமை உமக்கு
உண்டு ஆசானே.....

இந்த உலகில்
அனைத்து செல்வங்களும்
அழியக் கூடும்
நாம் கற்கும் கல்வியை தவிர.....

கல்வியை கற்று
தரும் ஆசிரியர்
கடவுளுக்கு நிகரானவர்
அறிந்த உண்மையே

ஆறுஅறிவுடன் பிறந்தாலும்
அறிவை பயன்படுத்த கிடைத்த
வழிகாட்டியே
ஆசிரியர் ....

மண் புழு மண்ணை
எப்படி உரமாக்க கற்று தருகிறதோ?
அதை போலத்தான்
ஆசானும்

**அருளானந்தம் ஞா.பிரகாஷ்**
கந்தப்பளை



# வியத்தகு மனிதர்

ஞானரை வென்றான் என்ற
பேர்பெற்ற நூல் படைத்த
சின்னாலி மப்பா வாழ்ந்த
சிறந்த இப் பதியில் வந்து
பாடநான் எழுந்து நின்றேன்
பண்போடு ஸலாம் உரைத்தேன்!

இலக்கியம்,எழுத்து கல்வி
எதிலுமே முந்தி நிற்கும்
மருதமா நகரில் வந்து
மாண்பினைப் பாட நின்றேன்!
அரும்பணி புரிந்த மேதை
ஹஸன்மவு லானா வைநான்
விருப்பொடு வாழ்த்த வந்தேன்!
வியத்தகு மனிதர் அன்னார்!

எண்ணத்தில் தூய்மை யோடு
இவர் செய்த பணியினாலே
உண்மையில் பலனைப் பெற்றார்
உயிர்வாழும் போதே அன்னார்
பொன்னான செயலுக் காகப்
புகழ் பெற்றார் மதிப்பும் பெற்றார்
இன்றவர் செய்த சேவை
இலங்குது தூபி யாக!

பழந்தமிழ் இலக்கி யத்தில்
பரிச்சயம் கொண்டிருந்து
நிலைபெற்ற (1)நூல்கள் தந்து
நிமிர்ந்திடச் செய்த மேதை
இஸ்லாமிய இலக்கி யத்தின்
தோற்றுவா யாக நின்று
படைத்திட்ட நூல்க ளெல்லாம்
பளிச்சிடும் மேன்மை சேர்க்கும்!

உரைநயம் (2) பலநூல் செய்தார்
புராணங்கள் ஞான நூற்கள்
பொருளது புரியுமாறு
தெளிவுரை செய்தார் அன்னார்!
அறிமுக (3)ஆய்வுரைகள்
ஆராய்ச்சி மொழி மாற்றங்கள்
எனப்பல பணிகள் செய்தார்
இதன்பலன் இன்றும் பெற்றார்!

விருதுகள் (4) பட்டம் என்று
வேண்டிய மட்டும் பெற்றார்
திறமைகள் நிறைந்திருந்த
பெருமகன் மௌலா னாவின்
அரும்பணி உலக மெல்லாம்
அவர்புகழ் கொண்டு சேர்க்கும்

இஸ்லாமிய இலக்கி யத்தில்
இவரொரு ஊற்றுக் கண்ணாய்
இருந்தவர் என்ப தோடு
பொன்விழாக் காணச் செய்த
பொன்மனச் செம்மல் என்ற
பெருமையும் இவரைச் சேரும்!

மருத முனைப்பதியோ பெற்ற
மகத்துவம் அதிக மாகும்
பெருமகன் ஷரிபுத்தீன் ஹாஜி
பிறந்தவூர், இலக்கி யத்தில்
சிகரத்தை தொட்டு நின்ற
சிறந்தநல் லெழுத் தாளர்கள்
வாழ்ந்த ஊர்,வாழும் ஊரே!

மருதூர்க் கொத்தனும் கனியும்
வாழ்ந்து
சிறுகதை கவிதை யாலே
சீர்புகழ் சேர்த்த நல்லூர்!

இப்பதி பிறந்து இன்று
பெரும்புகழ் படைத் திருக்கும்
செய்யது ஹஸன் மௌலானாவை
மனமார வாழ்த்து கின்றோம்!

வாழ்க எம் ஹஸன் மௌலானா
வளம்பல பெற்று வாழ்க!

இஸ்லாமிய இலக்கியத்தின்
இதயமாய்
முன்னோடி மாநாடு செய்த
ஹஸன் மௌலானா வாழ்க! வாழ்க!

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

***( இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் காவலர் ,தீன் தமிழ்க் கவிஞர்,தாஜுல் அதீப்,மர்ஹூம் அல்ஹாஜ் எஸ்.ஏ.ஆர் எம் . செய்யது ஹஸன் மௌலானா அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு அண்மையில் நடை பெற்றது. இஸ்லாமிய இலக்கியப் பொக்கிஷம் அல்ஹாஜ் எஸ் ஏ.ஆர் எம். செய்யது ஹஸன் மௌலானாவை வாழ்த்திப் படித்த கவிதை இது)***